| **G 7/9** செல்வன் **M. சதீஷ்குமார்**<br>உத்திரம் 2ம் பாதம்<br>தென்னவராய<br>பூர்வீகம் : பெத்தநாயக்கன் பாளையம் | **23.06.96**<br>172 cm | DCE | Asst. Civil Engineer<br>Own Cab Service<br>with Business<br>Rs.40,000/PM | திரு. முருகேசன் (Late),<br>106, மேற்கு வேளாளர் தெரு,<br>பெத்தநாயக்கன் பாளையம்<br>அஞ்சல் & வட்டம்<br>சேலம் மாவட்டம்<br>Cell : **99768 30455, 89405 56010** |
| **G 8/9** செல்வன் **R. பிரவீன்**<br>சுவாதி<br>குழுமுட<br>பூர்வீகம் : பூலாமேடு (சிதம்பரம்)<br>விருப்பம் : ஏற்ற வரன் | **18.12.95**<br>5' - 3" | B.E., | YES Bank IT<br>Rs. 60,000/PM | திரு. C. ரமேஷ்,<br>**66,** பள்ளிக்கூடத் தெரு,<br>அம்மாபேட்டை,<br>சிதம்பரம்.<br>Cell : **98423 03216, 88709 23031** |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 9/9** செல்சன் **R. சிவகிருபா**<br>அவிட்டம்<br>குளத்துட<br>பூர்வீகம் : வரவுகுடி | **25.02.98**<br>160 cm | B.E.<br>(Mech) | Chennai Radha Engg. Works, Chennai<br>Rs. 30,000/PM | திருமதி. K. ஜெயலெட்சுமி,<br>W/o. S.S. விஸ்வநாதன்,<br>3/51, வடபாதி தெரு,<br>சோழம்பேட்டை, மயிலாடுதுறை<br>Cell : **94439 66945** |
| **B 10/9** செல்வன் **R. அரவிந்த்**<br>பரணி<br>பில்லாலுட<br>பூர்வீகம் : திருமாந்துறை (சூரியனார் கோவில்) | **03.07.94**<br>168 cm | M.Tech., | IT, Net Access India Ltd., Chennai<br>Rs. 13 Lakhs/PA | திரு. R. ரமேஷ்,<br>64, காவேரி சதுக்கம்,<br>தந்தை பெரியார் நகர்,<br>விழுப்புரம் – **605 401.**<br>Cell : **94427 41245, 94890 12545** |
| **B 11/9** செல்வன் **S. சிவசங்கர்**<br>சித்திரை 4ம் பாதம்<br>தென்னவராய<br>பூர்வீகம் : மணலூர், விருத்தாசலம்<br>குறிப்பு : முதல் திருமணம் விவாகரத்து பெற்றவர் | **22.12.89**<br>5' - 7" | B.Tech.,<br>(Mech)<br>DAE | Quality Engineer<br>Die Tech India Pvt. Ltd., Chennai<br>Rs. 35,000/PM | திரு. P. சிவக்குமார்,<br>21/5, பிள்ளையார் கோவில் தெரு,<br>மணலூர், 28வது வார்டு,<br>விருத்தாசலம் வட்டம்.<br>கடலூர் மாவட்டம் – **606 001.**<br>Cell : **97862 99310, 99526 38195 63695 32640** (W) |
| **G 12/9** செல்வன் **கு. ஸ்ரீ அஸ்வத்**<br>உத்திரட்டாதி<br>முதனுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : தகுதியான வரன்<br>குறிப்பு : ராகு, கேது உள்ளது | **11.11.97**<br>178 cm | B.E. (EEE) | System Engineer<br>Chennai<br>Rs. 10,00,000/PA | திரு. கோ. குஞ்சிதபாதம்,<br>20/2, மேற்கு ரத வீதி,<br>பெண்ணாடம் – **606 105.**<br>Cell : **88705 55569, 98423 57920** |

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

- செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.
- E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

- செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

*அனைத்து தபால்களையும் **கார்காத்தார் ஒப்புரவு,***
***எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை – 600 094.***
***என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.***

*– கார்காத்தார் ஒப்புரவு*

## கார்குல இளைஞர்களின் ஓர் கண்ணோட்டம்

நமது வருங்கால பயணத்தையும், பொறுப்பையும் நோக்கிய ஒரு கண்ணோட்டத்தை உங்களிடம் பகிர்ந்துகொள்ள விழைகிறோம். நாம் ஒரு பெருமைக்குரிய, பாரம்பரியமான குலத்தின் வழித்தோன்றல்கள். நமது வரலாறு புராண காலத்திற்கே நம்மை அழைத்துச் செல்கிறது. இந்திரன் மழைமேகங்களைச் சிறையெடுக்க, பாண்டிய நாடு பஞ்சத்தில் வீழ்ந்தது. அம்மேகங்களைச் சிறை மீட்க உக்கிர பாண்டியன் நமது கார்குல மக்களைத் தூதுவர்களாக இந்திரனிடம் அனுப்ப, தம் வாக்கையே பிணையாக வைத்து மேகங்களை மீட்டதினால் கார்காத்த வேளாளர் எனும் பெயர் பெற்றோம் – என்பது வரலாறு. இது புராணமோ, வரலாறோ மட்டுமல்ல; இது மண்ணையும், மக்கள் நலனையும் நேசிக்கும் ஒரு சமூகத்தின் கதை.

நாம் பேரரசுகளின் முதுகெலும்பாக இருந்துள்ளோம். சோழ அரசின் வெற்றிக்கு காரண–மான நீராண்மை மற்றும் நகர மேலாண்மை, விவசாய வளர்ச்சி, அரசு நிர்வாகம் ஆகியவற்றில் நமது பங்களிப்பு நிரூபிக்கப்பட்டுள்ளது. சோழர்களின் காணி செழித்து வளர காரணமானவர்கள் நமது முன்னோர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் விவசாயிகளும், போராளிகளும் மட்டுமல்ல; நம் குல முன்னோர்கள் சிறந்த நிர்வாகிகள், தத்துவவாதிகள், நீதிமான்கள், தர்மவான்களாக இருந்துள்ளனர். நமது கலாச்சாரத்தில் நன்கு வேரூன்றி, நம் குலத்தில் புகழ்பெற்ற முன்னோர்களில் சிலர்:

கரிகால்சோழன் – கல்லணை கட்டியவன்; பாரி மன்னன் – ஒரு முல்லைக் கொடிக்கு தன் தேரைக் கொடுத்த வள்ளல்; மற்றும் நம் குல வள்ளல்கள் சடையப்ப வள்ளல், சிக்கபூபதி எனும் குறுநில மன்னர்கள் போன்று பலர் உள்ளனர். திருநாவுக்கரசர் (அப்பர்), சேக்கிழார், முனையடுவார், வாயிலார் நாயனார் போன்ற 13 நாயன்மார்களும், ஆழ்வார்களில் நம்மாழ்வாரும், சிவஞானபோதம் அருளிய மெய்கண்டாரும் கார்குலத்தினர். சமுதாயத்தில் பக்தியைப் பரப்பியவர்கள். விழுப்பதரையர், காலிங்கராயர், பல்லவட்டரையர், முத்தரையர் போன்ற படைத்தளபதிகள், மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ஆறுமுக நாவலர், ரா.பி. சேதுப்பிள்ளை, தி.க.சி. போன்ற தமிழ் ஆளுமைகளும் கோலோச்சிய சமூகம் நமது கார்குலம்.

நாம் கல்வி, இலக்கியம், அரசியல், கோவில் கட்டிடக் கலை போன்ற துறைகளில் சாதித்துள்ளோம். பெண்களுக்கும் மரியாதை கொடுத்தது நமது சமூகம். நேர்மை, சேவை, ஆன்மீக நெறிப்பாடு, தர்மம் ஆகியவற்றை வாழ்வியல் அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தவர்கள். விவசாய சீர்திருத்தக்காரர்களாக நமது மண்ணிலிருந்தே எதிர்காலத்தை வடிவமைத்தவர்கள்.

இவையெல்லாம் கடந்த கால நினைவுகள். இப்போது நமது நிலை? சிந்தனைக்குரிய ஒரு தருணம். நாம் இன்று பிளவுபட்டுள்ளோம். நமக்குள் ஒற்றுமை இல்லாத நிலை, ஒருவருடன் ஒருவர் இணைந்து செயல்பட முடியவில்லை. குடும்பத்திற்குள் கூட உறவுகளை நிலைநிறுத்த முடியாத சூழ்நிலை. தற்சமயம் பழமையான பண்பாடுகள் மறைந்து, சுயநலமே நமது வழிகாட்டியாக மாறியுள்ளது. எனக்கு என்ன கிடைக்கும்? என்பதே நம் முன் இருக்கும் கேள்வி. ஏன் இந்நிலை? நம் உறவுச் சங்கிலி என்னவாயிற்று? பெருந்தன்மையும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் எங்கே சென்று ஒளிந்தன? சரியான இணைப்பு நம்மிடையே இல்லாததாலும், நமக்கிடையே உள்ள ego வாலும் தான், உறவுச் சங்கிலி அறுபட்டு நிற்கிறது. நம்மில் பலர் நம்முடைய அடையாளத்தை மட்டுமல்ல நம்மினம் என்ற உணர்வையும் மறந்துவிட்டோம். இது குற்றச்சாட்டல்ல! இது ஒரு விழிப்புணர்வு அழைப்பு!

நாம் செய்ய வேண்டியது அந்த சிறப்பான காலக்கட்டத்திலிருந்த நமது நற்குணங்களை மீண்டும் நமது வாழ்க்கையில் முன்னெடுப்பதுதான்.

தனிநபர் வட்டத்தில்: நேர்மை மற்றும் ஆன்மீக ஒழுக்கம் பின்பற்றப்பட வேண்டும். தலைமையேற்பு, நிர்வாகம், அரசுத்துறை மற்றும் அரசியலில் சாதிக்க வேண்டும். நம் பாரம்பரியத்தினை எண்ணத்திலும், செயலிலும் பிரதிபலிக்க வேண்டும்.

குடும்ப மட்டத்தில் : நமது கார்குலத்திற்கே உரிய சடங்கான விளக்கேற்று திருமணம், கோத்திர அங்கீகாரம், குலதெய்வ வழிபாடு, வீட்டுத் தெய்வ வழிபாடு போன்ற கலாச்சார சடங்குகளை மீட்டெடுக்க வேண்டும். பண்பாடுகளையும், சடங்குகளையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்த வேண்டும். இணைப்பினால் குடும்ப உறவுகளை மீண்டும் ஒன்று சேர்க்க வேண்டும். திருமணம் முடிக்கும் போது, நாம் எதிர்பார்ப்பது மணமகளிடமோ, மணமகனிடமோ சிறிது குறைவாக உள்ளதெனில் ஏனை உட்பிரிவுகளுக்குச் செல்வது இக்காலக் கட்டத்தில் பார்க்க முடிகிறது.

இது நமது D.N.A. வில் மாற்றங்களைக் கொண்டு வந்துவிடுகிறது. அதைத் தவிர்க்க முயற்சிக்கலாம்.

சமூக மட்டத்தில் : சமூக சேவை மற்றும் கோவிலுக்கு தானம் வழங்குதல் போன்ற பாரம்பரியத்தை வலுப்படுத்த வேண்டும். பின் வரும் முயற்சிகளை ஆதரித்து அனைத்து நகரங்களிலும் விரிவுபடுத்த ஆவன செய்யலாம்.

'பசிப்போா் புசிக்க' – குடந்தையில் 365 நாட்களும் இலவச உணவளிப்பு (குறிப்பிட்ட எண்ணிக்கையில்)

சேவைகள் – நெய், எண்ணெய், வஸ்திரம், அபிஷேக சாமான்கள் வழங்குதல் மற்றும் கோவில் பராமரிப்பு, முதியோா் இல்லங்கள், குழந்தைகள் காப்பகங்களுக்கு தேவையானவற்றை வழங்குதல்; உணவளித்தல் போன்ற செயல்கள், வசதி இல்லாத பள்ளிகளில் கழிப்பறை வசதி செய்து கொடுத்தல்; விளையாட்டு உபகரணங்கள், கல்வி உதவித்தொகை வழங்குதல், இயலாதவா்களுக்கு மருத்துவ உதவி செய்தல்; செயற்கை கை, கால்கள், மூன்று சக்கர நாற்காலி வழங்குதல் போன்றவை.

ஊக்கம், ஒற்றுமை, ஒத்துழைப்பு, மனிதநேயம் கொண்ட சமூகத்தை முன்னெடுக்க வேண்டும். போட்டியை விட கூட்டணி முக்கியம் என்பதை உணரவும், உணா்த்தவும் வேண்டும். மகளிா் கல்வி முன்னேற்றம், விவசாயத்தில் பல புதிய நுணுக்கங்கள், விவசாய தொழில்கள், புதிய கண்டுபிடிப்புகள் போன்றவைகளில் நமது மாணவ, மாணவிகளை ஊக்கப்படுத்துவதும் நமக்குள்ள கடமைகளில் முக்கியமானதாகும்.

வரலாற்றை மறந்து விட்டால், எதிா்காலம் என்பது திசை மாறும் கப்பல் போல் ஆகிவிடும். சமூகம் என்பது ஒரு பெயா் மட்டுமல்ல – அது தியாகம், அறிவு, பெருந்தன்மை, மற்றும் பண்பாட்டு மரியாதையின் வெளிப்பாடு. பழம் பெருமையை மட்டும் பறை சாற்றிக் கொண்டிராமல் வாழ்ந்து காட்ட வேண்டிய தருணமிது. விழிப்புணா்வுடனும், உயரிய நோக்கத்துடனும் செயல்பட்டு நம் பெயருக்குரிய ஒரு எதிா்காலத்தை உருவாக்குவோம் – 'பிள்ளை' எனும் பேருக்கேற்ப!!

நன்றி! வணக்கம்!

– வை. விஜய் ஆனந்த்
மற்றும் காா்குல நண்பா்கள்
அலைபேசி : 91766 84661

## திருவிளையாட்டம் நண்பர்கள் அமைப்பு 8ஆவது ஆண்டு விழாவின் கவிதை

சுயம்பு வரம்...!!
பாட்டாளிக் காா்குலத்தாா்
பண்ணைக் காடு;
படிப்பறிவில் 'பெருமுளை'யோா்
பல்கலை நாடு;
சீட்டாட்டத் திண்ணைகளும்
திகழ்ந்த வீடு;
சவுரிராசன் உயா்பள்ளிக்
கல்விக் கோவில்!
கூட்டாளித் தத்துவத்தின்
புத்தகச் சாலை!
கொட்டிவைத்த வீரசோழன்
செல்வச் சோலை;
நாட்டாண்மை விவசாயத்
தஞ்சை மண்ணில் –
நட்ட 'திரு விளையாட்டம்' –
சுயம்புக் கோட்டை!
முன்னையோா் காலத்திரு
முல்லை யூராம்;
மூங்கில்மரக் காடுகளில்
மயில்கள் ஆட்டம்;
தென்னையிள நீா்மொண்டு
தாகம் தீா்க்கும் –
தேக்குமர வல்லிளைஞா்
பட்டறைப் பேரூா்;
கண்ணின்மணி ஒளிபடைக்கும்
கல்விச் சான்றோா் –
கழனிதோறும் பொன்விளைத்த
வேளாண் கூட்டம்;
மண்ணழகூா் மன்னவா்தாம்
'சுயம்பு நாதா்' –
'முல்லைவன நாயகி'யின்
அருட்பே ராட்சி!!

– கவிக்கூத்தன் தஞ்சை மயிலரசன்

22.08.2025 சென்னை – 51.

## கார்குல திருநாள்
## கார்குல கலாச்சார சங்கமம்

'வரலாறு இல்லையெனில், ஒரு சமுதாயம் இல்லை; அதன் எதிர்காலமும் இல்லை' எனும் கூற்று, மற்றும் கிருஷ்ண பரமாத்மா நமது கலாச்சாரம், சடங்குகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமெனபகவத்கீதையின் 2ஆம் அத்தியாயத்தின் 42ஆம் சுலோகத்தில் கூறியுள்ள வண்ணமும், நமது கார்குல கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய பண்பாடுகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் நோக்கத்தில் நமது கார்குல குரு மணி தருமையாதீனம் அவர்களின் அருளாசியோடு கோவில் நகரமாம் கும்பகோணத்தில் கார்குலத் திருநாள், கார்குல கலாச்சார சங்கமமாக, செட்டி மண்டபம் பைபாஸில் அமைந்துள்ள மகாலட்சுமி மஹாலில் ஆகஸ்ட் மாதம் 10ஆம்நாள், ஞாயிற்றுக்கிழமையன்றுமிகவிமரிசையாக கொண்டாடப்பட்டது. முதல் நாள் மாலையே மண்டபத்திற்கு வந்து ஏற்பாடுகளை திருச்சி, குடந்தை, சென்னை மற்றும் விருத்தாச்சல சகோதரிகளும், சகோதரர்களும் நள்ளிரவு 12 மணி வரை கவனித்து செய்தது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

காலை உணவுக்கு முன் சுமார் 7.30 மணிக்கு விருத்தாச்சலம் மகளிர் அணியினைச் சார்ந்த திருமதி. சாந்தி ஜெயக்குமார் அவர்கள் போற்றி கூற, குடந்தை மகளிர் ஐவர், குத்து விளக்கின் ஐந்து முகங்களையும் மலர் கொண்டு வழிபட்டனர். விழாவின் முதல் நிகழ்வாக சுமார் 8.45 மணி அளவில் போற்றத்தக்க வாசகங்களுடன் கூடிய பதாகைகளைத் தாங்கிய வண்ணம், சுமார் 25 ஊர்களிலிருந்து வந்திருந்த மகளிர் பேரணியாக மண்டபத்தின் உள்ளே வர, தமிழ்நாடு கார்காத்தார் கூட்டமைப்பின் தலைவர், முனைவர் திரு. K.K.R.K. சுரேஷ் அவர்கள் கார்குலத்தின் கொடியினை ஏற்றி விழாவினைத் தொடங்கி வைத்தார். விழா அரங்கின் கீழ்த்தளத்தில் கார்குல சகோதரிகள் அவர்கள் பொருட்களை மொத்தம் 24 கடைகளில் காட்சிப்படுத்தியதுடன், விற்பனையும் செய்தனர். வருண பகவான் வரும் வரையில் கடைகளில் கூட்டம் அலைமோதியதாக தெரிவித்தனர்.

விழாவின் முதல் நிகழ்வு: குத்து விளக்கேற்றுதல், கடவுள் வாழ்த்து, கார்குலத்தின் இனப்பாடல் மற்றும் சிறுமி சாதனாவின் வரவேற்பு நடனத்துடன் காலை நிகழ்ச்சி தொடங்கியது. மேடையை இவ்விழாவினை ஒருங்கிணைத்த ஐவர் குழுவான திருமதி. சரஸ்வதி பாலசுப்ரமணியம், திருமதி. சாந்தி சிவகுமார், திருமதி. மைதிலி வைத்தியநாதன், திருமதி. வனஜா இளங்கோவன் மற்றும் திருமதி கலையரசி ராஜசேகரன் அலங்கரிக்க, அவர்களைப் பாராட்டி நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. திருமதி அம்பிகா மதி நெறியாளராக திறம்பட காலை நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். துணைத்தலைவி திருமதி. கலையரசி வரவேற்பு உரை நல்கிட, அமைப்பாளர் திருமதி. சரஸ்வதி விழாவின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார். பொருளாளர் திருமதி. மைதிலி முன்னிலை உரையை கவிதையாகப் பொழிய, செயலாளர் திருமதி. சாந்தி விரிவாக நோக்க உரையாற்றினார். கௌரவத் தலைவி திருமதி வனஜா, போட்டிக் குழுவின் தலைவி திருமதி கிருஷ்ணவேணி, திருமதி லலிதா, திருமதி. இந்து மற்றும் பலர் குழந்தைகளுக்கான இறுதிச் சுற்று போட்டிகளை நடத்தி பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

இரண்டாம் நிகழ்வு: சுமார் 11 மணி அளவில் விழாவின் முக்கிய நிகழ்வான கார்குலத்தின் சிறந்த சாதனைப் பெண்களைப் பாராட்டும் நிகழ்வு நடைபெற்றது. தலைமையேற்பதாக இருந்த திருமதி. ராதா செல்வி வெங்கடேசன், (CEO Interlace India Pvt. Ltd) வர இயலாத சூழ்நிலை, எனினும் அவரின் சாதனைகள் எடுத்துக் கூறப்பட்டது. ஏனைய சாதனையாளர்களான டாக்டர் V. மாதினி – தகைசால் மகப்பேறு மருத்துவர், முனைவர் மைதிலி சோமசுந்தரம் – Additional Registrar, SRM Medical College, திருமதி. ரூப்மதி ஆனந்த் – புகழ்பெற்ற கட்டிடக் கலை நிபுணர், டாக்டர் செல்வி. உலகம்மாள் – a well known motivational speaker, திருமதி. ஷம்மிரத்னா, சிதம்பர நகரத்தின் சிறந்த கல்வியாளர்; தாளாளர் எடிசன் குழுமப் பள்ளிகள், திருமதி. கார்குழலி, குத்தாலத்தில் வளர்ந்து வரும் இளம் தொழிலதிபர் ஆகியோர் பாராட்டப்பட்டனர். அவர்களும் நமது மக்களுக்கு அருமையானதொரு ஏற்புரை நிகழ்த்தி சிறப்பித்தனர்.

மூன்றாம் நிகழ்வு: சுமார் காலை 12 மணி அளவில் டாக்டர் ஞானவதி அசோகன் தலைமையில் குழந்தைகள் ஐவர், கார்குலப் பண்புகளான விருந்தோம்பல், வாக்குத் தவறாமை, பக்தி, நேர்மை, ஆளுமைத்திறன் குறித்து பேசிய மிகச்சிறப்பானதொரு கருத்தரங்கம் நடந்தது. இடை இடையே நடனத்தில் பரிசு வாங்கிய சிறுமிகள் தங்கள் திறமைகளை அரங்கேற்றி பரிசுகளைப் பெற்றனர். போட்டியில் வென்ற சிலர் தங்கள் திறமைகளை அரங்கேற்றியதும் காலை நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

மதிய உணவுக்குப் பின், சுமார் 2¼ மணிக்கு அடுத்த நிகழ்வான கார்குலத் தலைவர்களைப் பாராட்டுவதும், அவர்கள் வாழ்த்துரை வழங்கும் விழாவும் ஆரம்பமானது. மதியநிகழ்வின் நெறியாளரான திருமதி. கலையரசி அவர்கள் சிறப்பு விருந்தினர்களை

அறிமுகம் செய்வித்து சிறப்புடன் நிகழ்வினை நடத்திச் சென்றார். தலைவர், முனைவர் திரு. K.K.R.K. சுரேஷ், பொதுச்செயலாளர் திரு. M. பாலசுப்ரமணியன், பொருளாளர் திரு. G. ராமநாதன், அமைப்புச் செயலாளர் திரு. கைலை. சண்முகம், குடந்தை சங்கத் தலைவர் திரு. T.M. வைத்தியநாதன், மாநிலத் தலைமை நிலைய செயலர் திரு. குமார், சிறப்பு விருந்தினர்களான சமூக ஆர்வலர் ஆனந்தம் திரு. செல்வகுமார், இளம் கணினி நிபுணர் திரு. V. விஜய் ஆனந்த் ஆகியோர் மேடையை அலங்கரிக்க, திருமதி. வனஜா வரவேற்புரை ஆற்றிட, தலைவர்கள் கௌரவிக்கப்பட்டனர். பின் விழாவின் நோக்க உரையினை திருமதி. சரஸ்வதி குழந்தைகள் புரிந்து கொள்ளும் வண்ணம் உரையாற்றினார். அதன் பின் கார்குல வரலாறு வீடியோ வெளியிடப்பட்டது. அனைவரும் மிகுந்த ஆர்வத்துடன் ரசித்துப் பார்த்து மகிழ்ந்தனர். அதன்பின் தலைவர்கள் மேடையேறி விழாவிற்கு வாழ்த்துரை வழங்கி, மகளிர் அனைவரையும் பாராட்டினர். குடந்தை சங்கம் முதலில் தலைவர்களுக்கும், ஐவர் குழுவினருக்கும் மரியாதை செய்ய, அதன் பின் ஏனைய சங்கங்களும் முன்வந்து மரியாதை செய்தனர். குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. சில குழந்தைகள் கவிதைகள் கூறினர். சமூக ஆர்வலர் திரு. ஆனந்தம் செல்வகுமார் அவர்களும், இளம் கணினி நிபுணர் திரு. விஜய் ஆனந்த் அவர்களும் பார்வையாளர்களுக்கு நல்லதொரு சிறப்புரை வழங்கினர்.

இம் மகளிர் விழாவைச் சிறப்பாக நடத்திய பொறுப்பாளர்கள் மற்றும் அனைத்து ஊர்களில் இருந்தும் வந்திருந்த மகளிர் குழுவின் பொறுப்பாளர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர். போட்டியில் கலந்துகொண்ட அனைத்து குழந்தைகளுக்கும் கோப்பைகள் அளித்து சிறப்பிக்கப்பட்டது. விழாவுக்கு வருகைபுரிந்த சுமார் 220 குழந்தைகளுக்கும் 'உண்டியல்' நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது. விழாவுக்கு வருகை புரிந்த ஆடவர்கள் துண்டு அணிவித்து வரவேற்கப்பட்டனர். மகளிர் அனைவருக்கும் நினைவுப் பரிசாக கைப்பை வழங்கப்பட்டது. அருமையானதொரு நன்றியுரையை மயிலாடுதுறை மகளிர் அணியின் திருமதி. கோமதி ரத்னகுமார் வழங்கிட, நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

சுமார் 2 மாத காலமாக யோசித்து, பலரின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட இவ்விழா எங்களுக்கு (மகளிருக்கு) புதிது. கன்னி முயற்சி; இத்தகைய ஆரவாரத்துடன் சிறப்பாக நடந்ததற்கு கடவுளுக்கு நன்றி கூற நாங்கள் ஐவரும் கடமைப்பட்டுள்ளோம். அவரவர் ஊர்களில் போட்டி நடத்தி, முதல் இரு பரிசுகளைத் தேர்ந்தெடுத்து, இறுதிச் சுற்றுக்கு அழைத்து வந்த அனைத்து மகளிர் அணி பொறுப்பாளர்களையும் இத்தருணத்தில் பாராட்டுகிறோம். முதல் நாளே அரங்கிற்கு வந்திருந்த அனைத்து வேலைகளையும் பகிர்ந்து செய்த சகோதர, சகோதரிகளுக்கு எங்களின் இருகரம் கூப்பிய வணக்கங்கள், சில குறைகள் இருப்பினும், நாங்கள் எங்களால் இயன்ற அளவு கலாச்சாரத்தினையும், பண்பாட்டினையும் அடுத்த தலைமுறைக்கு கடத்தியுள்ளோம் என எண்ணுகிறோம். பெற்றோர் சிலர் எங்கள் குழந்தைகள் கூகிளில் கார்காத்தார் வரலாறு, பண்பாடு தேடி எடுத்து பேச்சுப் போட்டிக்கும், கவிதைப் போட்டிக்கும் தயார் செய்தார்கள் எனக் கூறியதைக் கேட்டபோது, நாங்கள் நினைத்தது ஓரளவு நடந்துவிட்டது என்று மகிழ்ச்சி கொண்டோம். எங்களுடன் இவ்விழா வெற்றி பெற பாடுபட்ட அனைத்து குழுக்களின் (வரவேற்பு, போட்டிகள், பரிசு, உணவு, மேடை நிர்வாகம் மற்றும் ஒலி, ஒளிக் குழுக்கள்) மகளிருக்கும், பரிசுப் பொருட்கள் வாங்கிட உதவிய மண்டலச் செயலாளர் திரு. தியாகராஜன் அவர்களுக்கும், குறிப்பாக இவ்விழாவினை நடத்த பிள்ளையார் சுழி போட்டதிலிருந்து, இடம் தேர்ந்தெடுப்பது முதல் எல்லாவற்றிலும் எங்களுக்கு உறுதுணையாக இருந்த தமிழ்நாடு கார்காத்தார் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் திரு. M. பாலசுப்ரமணியன் அவர்களுக்கும், பரிசுக் குலுக்கலுக்கான பல பரிசுப் பொருட்களை கொடுத்துதவிய கூட்டமைப்பின் தலைவர் திரு. K.K.R.K. சுரேஷ் அவர்களுக்கும், எங்களுக்கு இவ்விழாவிற்கான தைரியம் கொடுத்து, ஊக்குவித்த கூட்டமைப்பின் பொருளாளர் திரு. G. ராமநாதன் பிள்ளை அவர்கள் மற்றும் அமைப்பாளர் திரு. கைலை. சண்முகம் அவர்களுக்கும், குடந்தையில் தேவையான அனைத்து உதவிகளையும் எங்களுக்களித்த குடந்தை நகர கார்காத்தார் சங்கத் தலைவர் திரு. T.M. வைத்தியநாதன் அவர்களுக்கும், அவர்கள் தலைமையிலான குழுவினருக்கும், விழாவிற்குத் தேவையான நிதி உதவியினை வாரி வழங்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எங்களின் கோடானு கோடி வணக்கங்களும்! நன்றிகளும்!

கலாச்சார சங்கம குழு

திருமதி. சரஸ்வதி பாலசுப்ரமணியன்

திருமதி. சாந்தி சிவகுமார்

திருமதி. மைதிலி வைத்தியநாதன்

திருமதி. வனஜா இளங்கோவன்

திருமதி. கலையரசி ராஜசேகரன்

## பட்டா மாற்றம்

சாதாரணமாக ஏதேனும் ஒரு அசையா சொத்து வாங்கியவரிடம் அவரது நண்பர்கள் பட்டா மாற்றிக் கொண்டு விட்டீர்களா என்று கேட்பதும், அதற்கு அந்த சொத்து வாங்கியவர்," அதெல்லாம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சொத்து வாங்கிய பத்திரமும் அதற்கான ஈ சியும் என்னிடம் உள்ளது என்று கூறுவது பல இடங்களில் நடப்பது வாடிக்கை. அதைப்போல் ஒரு சிலர் தங்க:ள் சொத்து பற்றிய ஈசீ எனப்படும் வில்லங்கச்சான்று இருந்தாலே அது சொத்துரிமைக் கான ஆவணம் என்றும் தவறாக நினைத்து விடுகிறார்கள்.

ஒரு சொத்துக்கான பட்டாவை மாற்றுவது எப்படி என்று பார்க்கும் முன்பாக, பட்டா என்றால் என்ன, அது சொத்துரிமை ஆவணமாகுமா வில்லங்க சான்று என்றால் என்ன போன்ற சில விபரங்களைப்பற்றி சிறிது பார்ப்போம்.

### அசையா சொத்து மாற்றம்

நம்முடைய நாட்டில் அசையா சொத்துரிமை ஒருவரிடமிருந்து மற்றவருக்கு மாறும் போது அதனுடைய மதிப்பு ரூ 100 க்கு மேல் இருந்தால் Transfer of Property Act எனப்படும் சொத்து பரிமாற்றச்சட்டப்படி. அந்த பரிமாற்றம் எழுத்து வடிவில் உரிய முத்திரைத்தாளில் எழுதப்பட்டுப் பதிவு செய்யப்பட வேண்டியது சட்ட பூர்வ தேவை ஆகும் அவ்வாறு எழுதிப் பதிவுசெய்யப்பட்ட ஆவணமே அந்த சொத்துரிமைக்கான ஆவணமாகும் மூலப்பத்திரம் உதாரணம் : பாகப்பிரிவினைப்பத்திரம், கிரையப்பத்திரம்,செட்டில்மெண்ட் எனப்படும் அறுதியா வணப்பத்திரம், பரிவர்த்தனைப் பத்திரம் போன்றவை

### வில்லங்க சான்றிதழ்

வில்லங்க சன்றிதழ் Registration Department எனப்படும் பதிவுத் துறையால், வழங்கப்படும் ஒரு சான்றிதழ். அதில் அந்த சொத்து பற்றிய நடவடிக்கைகள், அதாவது கிரையம் அடமானம் பரிவர்த்தனை போன்ற பல் வேறு நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கும், ஆனால் அது சொத்துரிமைக்கான ஆவணமாகாது.

### பட்டா என்றால் என்ன ?

அடங்கல் மற்றும் பட்டா என்பவை அரசின் வருவாய்த்துறை ரெவின்யூ டிபர்ட்மெண்ட் டினரால் அந்த பகுதியில் உள்ள அசையா சொத்துக்கள் பற்றி பேணப்பட்டு வரும் ஆவணம் மற்றும் பதிவேடுகள் ஆகும் அடங்கலில் அந்த குறிப்பிட்ட சொத்தில் என்ன பயிரிடப்படுகிறது என்ற விபரம் அந்த கிராம நிர்வாக அலுவலரால் பேணப்படும்

பட்டா என்பது அந்த குறிப்பிட்ட நில அளவை எண் சர்வே நம்பர் யாருக்குச் சொந்தமானது யார் அனுபோகத்தில் உள்ளது என்பதைக் குறிக்கும். அதாவது ஒரு அசையா சொத்தின் உரிமையாளர் யார் அது யார் அனுபோகத்தில் Possession உள்ளது என்பதைக் குறிக்கும் வருவாய்த்துறை ஆவணம்தான் பட்டா வாகும்.

ஒரு அசையா சொத்தின் உரிமையை நிலை நாட்டுவதற்கு பட்டா மட்டும் இருந்தால் போதுமா கிரைய பத்திரம் செட்டில்மெண்ட் பாகப்பிரிவினை போன்ற ஆவணங்கள் தேவை இல்லையா என்று கேட்டால் " ஆம் " என்று சொல்ல இயலாது. ஏனென்றால் ஒரு அசையா சொத்தின் உரிமையை நிலை நாட்ட அத்தகைய சட்ட பூர்வ ஆவணங்கள் தேவைதான்.

அத்தகைய சட்ட பூர்வ ஆவணங்கள் இல்லாத இனங்களில், உதாரணமாக கிராமப்புறங்களில் பல ஆண்டுகளாக பூர்வீக மாக பாத்தியப்பட்ட விவசாய நிலங்கள் , அரசால் இலவசமாகக் கொடுக்கப்பட்ட வீட்டு மனை அல்லது விவசாய நிலம் போன்றவற்றுக்கு கிரைய பத்திரம் போன்ற ஆவணங்கள் இருக்காது. அப்போது பட்டாதான் அவர்களது உரிமையை நிலை நாட்டக்கூடிய ஆவணமாக இருக்கும்.

### பட்டா ஏன் தேவை ?

#### 1. உரிமையை நிலை நாட்ட

ஏற்கனவே சொன்ன மாதிரி சுயார்ஜித சொத்துக்களுக்கு கிரைய பத்திரம், செட்டில்மெண்ட் போன்ற சட்ட பூர்வ ஆவணங்களும் கிராமப்புறங்களில் உள்ள பூர்வீக சொத்துக்களுக்கு பாகப்பிரிவினை போன்ற குடும்ப ஆவணங்களும் இல்லாத இனங்களில் அந்த சொத்தின் உரிமையை நிலை நாட்ட வருவாய்த்துறை அளிக்கும் பட்டா உதவும்.

#### 2. அரசு உதவிகள் கிடைக்க

அதாவது கிரைய பத்திரம் போன்ற ஆவணங்கள் இருந்தாலும் இல்லா விட்டாலும் அரசின் வருவாய்த்துறையைப் பொறுத்த வரை பட்டா தான் ஒரு சொத்தின் உரிமையைக் குறிக்கும் ஆவணமாகும். அரசு அளிக்கும் மான்யம் அல்லது இதர உதவிகள் அந்த பட்டாவின் அடிப்படையில்தான் வழங்கப்படும்.

#### 3. அனுபோகத்தை நிரூபிக்க

அசையா சொத்துக்களின் உரிமை நம்மிடம் இருந்தாலும் அச் சொத்துக் கள் நம்முடைய பொசஷன் என்னும் அனுபோகத்தில் இருக்க வேண்டியது அவசியம். கட்டிடம் அல்லது வீடு போன்றவை உள்ள அசையா சொத்துக்களில் நாம் குடியிருப்பது, வாடகைக்கு விட்டிருந்தால் வாடகைப் பத்திரம் மற்றும் நகராட்சிக்கு செலுத்தும் வீட்டு வரி மற்றும் குடி நீர் வரி போன்றவைகள் மூலம் அனுபோகத்தை எளிதாக நிரூபிக்கலாம். ஆனால் வீட்டு மனை அல்லது விவசாய நிலம் போன்ற கட்டிடம் ஏதும் இல்லாத அசையா

சொத்துக்களைப் பொறுத்தவரை அனுபோகத்தை நிரூபிக்க எந்த ஆதாரமும் காட்ட இயலாது. அந்த நேரங்களில் அனுபோகத்துக்கு ஆதாரமாகக் காட்ட வருவாய்த்துறையினால் வழங்கப்படும் பட்டா உதவிகரமாக இருக்கும்.

### 4. வங்கிக் கடன்களுக்கு

சென்னை போன்ற பெரு நகரங்களிலும் கோடிக் கணக்கில் மதிப்புள்ள வீட்டு மனையில் வீடு கட்டுவதற்கு லட்சக் கணக்கில் கடன் வழங்கும் வங்கிகள், கடன்தாரர் ஐ.டி. கம்பெனியில் லட்சக்கணக்கில் சம்பளம் வாங்கிக் கொண்டு அடமானமும் எழுதிக் கொடுத்தாலும் அந்த மனை வாங்கிய மூலப்பத்திரங்களை ஒப்படைத்தாலும் அந்த மனைக்கான பட்டா அவர் பெயரில் இருக்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

எனவேதான் நம்முடைய அசையா சொத்துக்கான மூலப்பத்திரமும் இதர ஆவணங்களும் இருந்தாலும் வருவாய்த்துறையினரால் வழங்கப்படும் பட்டா வையும் பெற வேண்டிய தேவை ஏற்படுகிறது.

### எந்த இனங்களில் பட்டா மாற்றம் தேவை ?

சாதாரணமாக ஒரு அசையா சொத்தினை கிரையம் மூலம் வாங்கும் போது பட்டாவை வாங்குபவர் பெயருக்கு மாற்றுவதற்காக தனக்கு ஆட்சேபணை இல்லை என்று விற்பவரிடம் ஒப்பம் பெற்று பதிவாளர் அலுவலகத்தில் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தாலும் நடை முறையில் வருவாய்த்தறை ஆவணங்களில் பட்டா மாற்றம் உடனே ஏற்படுவதில்லை. கிரையம் பெற்றவர் திரும்பவும் வருவாய்த்துறை வட்டாட்சியருக்கு மனு கொடுத்து பட்டாவை தன் பெயருக்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போல் உயில் செட்டில் மெண்ட் மூலம் சொத்து பெற்றவர்களும் நடவடிக்கை எடுத்து தங்கள் பெயருக்கு மாற்றம் செய்து கொள்ள வேண்டும்.

### யாரால் பட்டா வழங்கப்படும் ?

சாதாரணமாக வருவாய்த்துறை அதிகாரியான தாசில்தார் எனப்படும் வட்டாட்சியர் தான் பட்டா வழங்கும் அதிகாரம் படைத்தவர். ஆனால் சில சந்தர்ப்பங்களில் சூழ் நிலைக்கு ஏற்ப இதர அதிகாரிகளுக்கும் அந்த அதிகாரம் கொடுக்கப்படும்

### பட்டா மாற்றத்துக்கு நடவடிக்கை எடுப்பது எப்படி ?

யார் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்படவேண்டுமோ அந்தப்பகுதி வட்டாட்சியருக்கு மனு செய்து தக்க ஆவணங்களையும் இணைத்து உரிய கட்டணம் செலுத்தி சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அதிகாரி மூலமாக மனுவைக் கொடுக்க வேண்டும்

### இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

1.எந்த ஆவணத்தின் மூலம் சொத்துக்கான உரிமை கிடைத்ததோ அந்த மூலப்பத்திரம் ஆவணத்தின் நகல்.

2. அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டதைக் குறிக்கும் வில்லங்கச் சான்றிதழ் மனு செய்யும் காலம் வரைக்குப் பெற்று இணைக்க வேண்டும்.

3, அந்த வில்லங்க சான்றிதழில் வேறு நடவடிக்கைகள் வெளிப்பட்டிருந்தால் அந்த நடவடிக்கைக்கான ஆவணங்களின் நகல்கள்.

4, நிலத்தை விற்றவர் பெயரிலோ அல்லது வேறு எவர் பெயரிலோ அந்த சொத்துக்கு ஏற்கனவே பட்டா வழங்கப்படிருந்தால் அந்த பட்டாவின் நகல்

### மேல் நடவடிக்கை

அவ்வாறு பட்டா மாறுதலுக்கு விண்ணப் பித்தவுடன் கிராம நிர்வாக அலுவலர் அல்லது நில அளவையாளர் போன்ற வருவாய்த்துறை அதிகாரிகள் தேவைப்பட்டால் அந்த சொத்து இருக்கும் இடத்துக்கு வந்து அதில் குறிப்பிட்ட அளவுகள் சரியாக உள்ளனவா என்று சரி பார்ப்பார்கள். மனுதாரருக்கு முந்தின சொந்தக்காரர் பெயரில் பட்டா ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தால் மனுதாரர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்வது எளிதாக விரைவில் முடிந்து விடும். அப்படி அவர் பெயருக்கும் பட்டா மாற்றம் செய்யப்படாதிருந்தால், வருவாய்த்துறையால் பேணப்படும் சிட்டா போன்ற பதி வேடுகளில் அந்த குறிப்பிட்ட சர்வே எண் யார் பெயரில் உள்ளது என்பதைப் பார்ப்பார்கள்.

வருவாய்த்துறை ஆவணங்களில் கடைசியாக அந்த நில அளவை எண்ணுக்கான பட்டா யார் பெயரில் உள்ளதோ அவருக்கு எந்த ஆவணம் மூலம் அந்த சொத்து கிடைத்ததோ அந்த ஆவணத்தின் நகல் மற்றும் அவரிடமிருந்து மனுதாரருக்கு அந்த சொத்து மாற்றம் ஏற்பட்டது வரையில் தொடர்ச்சியாக உள்ள ஆவணங் களின் நகல்களையும் கொடுக்க வேண்டியிருக்கும்.,

அதன் பிறகு அந்த சர்வே எண் முழுவதற்கும் மனுதாரர் உரிமையாளராக இருந்தால் அவர் பெயரில் மாற்றம் செய்து கொடுத்து விடுவார்கள். அந்த சர்வே எண்ணில் ஒரு பகுதி மட்டும் தான் மனுதாரருக்குச் சொந்தம் என்றால் அந்த சர்வே எண் சப் டிவைட் என்று சொல்லக்கூடிய உட் பிரிவு செய்யப்பட்டு அதன் பிறகு அவர் பெயருக்கு மாற்றம் செய்யப்படும் . உட் பிரிவு செய்ய நேர்ந்தால். முதலில் உட் பிரிவு செய்யப்பட்டு பிறகு பட்டா மாற்றம் செய்ய கூடுதல் கால அவகாசம் தேவைப்படும்.

**அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கு பட்டா வழங்கப்படுமா ?**

பட்டாவில் ஒரு குறிப்பிட்ட நிலம் மற்றும் அதில் உள்ள கட்டிடம் பற்றிக் குறிப்பிட்டாலும் பட்டா என்பது நிலத்தைப்பற்றிய ஆவணமே ஒழிய கட்டிடங்களுக்கானது அல்ல . அடுக்கு மாடி குடியிருப்புகளைப் பொறுத்தவரை அதில் FLAT எனப்படும் குடியிருப்பு வாங்கியுள்ள அனைவருக்கும் குடியிருப்பு கட்டப்பட்டுள்ள அடி மனையில் குறிப்பிட்ட அளவிற்கு பிரிபடாத பாகத்தை அன் டிவைடெட் ஷேர் உரிமையாகப் பெற்றிருப்பார்கள். அடி மனை குடியிருப்பு வாங்கியுள்ள அனைவருக்கும் விகிதாச்சார அடிப்படையில் உரிமை இருக்கும் அதாவது அனைவரும் கூட்டு உரிமையாளர்கள். அந்த மாதிரி இனங்களில் பட்டா வழங்கப்பட்டால் அனைத்து உரிமையாளர்கள் பெயரிலும் கூட்டுப் பட்டாவாகத்தான் வழங்கப்படும். Un divided Share எனப்படும் பிரிபடாத பாகங்களுக்கு தனியே பட்டா வழங்கப்பட மாட்டாது

**எல்லா பட்டாக்களிலும் sketch எனப்படும் வரை படம் இருக்குமா ?**

மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பேணப்படும் Permanent Land Register எனப்படும் நிரந்தர நில பதிவேடு மற்றும் Town Survey Land Register எனப்படும் நகர நில கணக்கெடுப்புப் பதிவேடு எடுக்கப்படும் பட்டாக்களில் மட்டுமே டோபோ ஸ்கெட்ச் எனப்படும் நிலத்தின் அளவுகளுடன் கூடிய வரை படம் கொடுக்கப் பட்டிருக்கும். விவசாய நிலங்களுக்கு அப்படிப்பட்ட வரைபடம் கொடுக்கப் படுவதில்லை இந்தப் பதிவேட்டின் நகலில் சொத்து நிலம் மற்றும் வீடு இருக்கும் தெருவின் பெயர், மனை/ வீட்டு கதவு எண், நில உரிலமையாளர் பெயர் மற்றும் நிலத்தின் அளவுகள் . முன்பெல்லாம் அளவுகள் கிரவுண்டு சதுர அடியில் இருக்கும் இப்போதெல்லாம் ஹெக்டேர் ஏர் மற்றும் சதுர மீட்டரில் கொடுக்கப் பட்டிருக்கும்

1 hectare = 100 ares  1 are = 1076 square feet

1 are = 100 sq.meter. 1 sq.meter = 10.7639 sft

தமிழக அரசின் 2011 ஆம் ஆண்டு ஜூலை 8 தேதியிட்ட அரசாணை எண் 210, மற்றும் இந்து.காம் ,டி என் கவ.இன், ரமணன் 50 போன்ற இணைய தளங் களிலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம் சென்னை 97 போன் 98413 73184

## வாழ்த்துகிறோம்




எனது பேரன் **ச. விக்னேஷ்** PSG இன்ஜினியரிங் கல்லூரியில் (மெக்கானிக்கல் பிரிவு) தங்கப்பதக்கம் பெற்றுள்ளார் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். விக்னேஷ் மேலும் படித்து பல சாதனைகள் புரிய உங்கள் அனைவரின் ஆசீர்வாதத்தை வேண்டுகிறேன்.

**பூ. பழமலை பிள்ளை**

மேனாள் கார்காத்தார் சங்கத்தலைவர் விருத்தாசலம் வட்டம்



# சிறுவர் பகுதி




தயாரிப்பு **தஞ்சை தியாகு**

அலைபேசி: 94437 00375

Email: thiagu1943@gmail.com


வணங்கத் தொடங்கும்போதே வளரத்தொடங்குகிறோம்!

**தடைகளை தாண்டிச்செல்**



ஒரு குரு மரத்தடியில் இளைப்பாறிக் கொண்டிருந்தார். சீடன் விளையாட்டாக மரத்தில் ஏறிக் கொண்டிருந்தான். அங்கே வண்ணத்துப் பூச்சியின் வலைப் பின்னலைக் கண்டான். அதிலிருந்த வண்ணத்துப் பூச்சிப் பின்னலை விட்டு வெளியே வர திணறிக் கொண்டு இருந்தது. குழப்பத்துடன் சீடன் ரொம்பவும் சிரமப்படுகிறதே! அதற்கு உதவி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் அதை நெருங்கினான்.

கண்விழித்த குரு சீடனைக் கண்டார். சும்மா இரு ! அதன்போக்கிலேயே விட்டுவிடு ! என்று சொல்லிவிட்டு மீண்டும் உறங்கினார். சீடனுக்கு மனம் கேட்கவில்லை. குருவுக்குத் தெரியாமல், தடுமாறும் அந்தப்பூச்சியை பின்னல் கூட்டிலிருந்து விடுவித்தான். ஆனால், அந்த பூச்சி பறக்க முடியாமல் தரையில் விழுந்தது. கண்விழித்த குரு சீடனை நோக்கி, சொல்லியும் கேட்கவில்லையே! அதன் சிறகை சேதப்படுத்திவிட்டாயே! வண்ணத்துப் பூச்சி பறக்க வேண்டுமானால், அது தானாகவே கூட்டைவிட்டு வெளியே வந்திருக்கவேண்டும் என்று கடிந்து கொண்டார். வண்ணத்துப் பூச்சி மட்டுமல்ல! மனிதனுக்கும் இது பொருந்தும். வாழ்வில் குறுக்கிடும் கஷ்ட நஷ்டங்களுக்காக பிறரது உதவியை நாடக்கூடாது. அவனாகவே சமாளிக்கும் ஆற்றலைப் பெறவேண்டும். விடாமுயற்சியுடன் செயலாற்றினால்தான், தடைகளைத் தாண்டி உயரமுடியும்.

**விடுகதைகள்**

1.கட்டைபோலிருந்தவனை வெட்டிப்பிழிந்தால் இனிப்போ இனிப்பு. அது என்ன ?
2.ஒட்டுத் திண்ணையில் தடுக்குப் போட்டேன் எடுக்க முடியலை. அது என்ன ?
3.சின்னச் சின்னப் பெட்டிக்குள்ளே சேதியெல்லாம் கண்ணுக்குள்ளே.அது என்ன ?
4.கறுத்தமேகம் கண்ணீர் விடும்போது கறுத்த காளான் கம்பியில் படருது.அது என்ன ?
5.ஊசி நுழையாத கிண்ணத்தில் ஒரு ஆழாக்குத் தண்ணீர்.அது என்ன ?
6.ஒட்டி வளர்ந்தாலும் அவனை வெட்டி எறிவோம்.அவன்யார் ?
7.ஓராண்டு உயிர் வாழ்வான்.ஒயிலாகக் காட்சி தருவான்.அவன் யார் ?
8.ஒருவனைக் கூப்பிட்டால் ஊரையே கூட்டுவான்.அவன் யார் ?
9.வேகாத வெயிலில் வெள்ளையன் விளைகிறான்.அவன் யார் ?
10.வண்ணத்தில் சிவப்பழகன்.வாய்க்குள் செய்தி வாங்குவான்.அவன்யார் ?
11.அழுவேன்,சிரிப்பேன்,அனைத்தும் செய்வேன்.நான்யார் ?
12.அணில் ஏறாத கொம்பு.என்ன கொம்பு ?

**கணிதப்புதிர் :**

ரோமன் எண் XI- ஐ எழுதிக் கொள்ளுங்கள்.இதன் மதிப்பு 11ஆகும். இந்த ரோமன் எண்ணுடன் ரோமன் 1க்குச் சமமான கோடு ஒன்றினை (–) படுக்கை வசமாகவோ, செங்குத்தாகவோ, சாய்வாகவோ போட்டு அதன் மதிப்பை 10க்குச் சமமாக்க வேண்டும். மூன்று விதங்களில் இதைச் செய்யமுடியும்.முயற்சித்துப் பாருங்களேன்.



**நன்றற்றால் உள்ளும் தவறு உண்டு அவரவர்**
**பண்பு அறிந்து ஆற்றாக் கடை.**

அவரவர் இயல்பறிந்து, அவரவர்க்குத் தகுந்தபடி செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் நல்லது செய்தாலும் குற்றமுண்டாகும்.



## பிரச்சனைகளுக்குத் தீர்வு

நகரத்தில் வாழ்ந்த இளைஞன் ஒருவன் தனது அன்றாட பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு மாறுதல் தேடவேண்டி தன் சொந்த கிராமத்திற்குச் சென்றான். அந்த ஊருக்கு மிகவும் சிறிய வயதில் பெற்றோருடன் சென்றதுதான். தற்போது அதிகம் நினைவில்லை என்றாலும் தன்னை யாரென்று கூறிக்கொண்டு கிராமத்தை சுற்றிப்பார்த்தான். அங்குள்ள கோவிலின் சிறப்பை கேள்விப்பட்டு அங்கு சென்றான்.அக்கோவிலின் வாயிலில் இருந்த பெரியவர் இளைஞனை விசாரிக்க ,தனது பெயரையும்,யார் என்பதையும் நகரத்தின் பிரச்சனை நிறைந்த வாழ்க்கை யிலிருந்து விடுபட்டு அமைதிதேட வந்திருப்பதாகவும் கூறினான்.அப்பெரியவரும் எண்ணை நிரம்பிய கிண்ணம் ஒன்றினை அவன் கையில் கொடுத்து உள்ளாக சிறந்த ஓவியங்கள் நிரம்ப உள்ளன,கண்டு வா !அதே நேரம் கிண்ணத்திலுள்ள எண்ணையை மட்டும் சிந்தாமல் கவனம் செலுத்தி வா ! என்று கூறி அனுப்பினார்.உள்ளே சென்றவன் வெளியே வந்ததும் பெரியவர் கேட்டார். சித்திரங்களைப் பார்த்தாயா ? இளைஞன் கூறினான், எப்படி ஐயா பார்ப்பது ? எனது கவனம் முழுவதும் எண்ணைக் கிண்ணத்தின் மீதல்லவா இருந்தது என்றான்.பெரியவர் கூறினார். பிரச்சனைகள் நிறைந்ததுதான் வாழ்க்கை. பிரச்சனைகளை மட்டுமே நீ கண்டுவந்தால் மகிழ்வான வாழ்க்கையை காணமுடியாது. பிரச்சனைகளை தள்ளிவைத்து மாற்று வழியில் தீர்வுகாண முயற்சித்தால் மகிழ்வான வாழ்க்கையை நீ காணமுடியும் என்ற விளக்கத்தையும் அளித்தார்.

## இந்தியாவைத் தெரிந்துகொள்ளுங்கள்

1.இந்தியாவைப்போல அகஸ்ட் 15ந் தேதி சுதந்திரதினம் கொண்டாடும் நாடு எது ?

2.இந்தியாவின் முதல் மருத்துவமேதையின் பெயர் என்ன ?

3.இந்தியாவில் மதுவிலக்கை அமுல்படுத்திய முதல் முதலமைச்சர் யார் ?

4.இந்திய பசுமைப்புரட்சி விஞ்ஞானி எனப்படுபவர் யார் ?

5.இந்தியா முதன்முதலாகத் தயாரித்த முதல் போர்க்கப்பலின் பெயர் என்ன ?

6.இந்தியா எந்தத்துறையில் முதல் முதலாக நோபல் பரிசு பெற்றது ?

7.இந்திய ஷேக்ஸ்பியர் எனப்படுபவர் யார் ?

8.இந்திய தேசியகீதமான ஜனகனமனபாடலை எத்தனை விநாடிகளுக்குள் பாடி முடிக்க வேண்டும் ?

9.இந்தியாவின் முதல் அணுசக்தி நீர்மூழ்கி கப்பலின் பெயர் என்ன ?

10.இந்தியாவில் மதுவிலக்கு சட்டத்தினால் ஏற்படும் இழப்பை சரிசெய்ய எந்த வரி அறிமுகப் படுத்தப்பட்டது ?

11.இந்தியாவின் முதல் தபால் அலுவலகம் திறக்கப்பட்ட நகரம் எது ?

12.இந்தியாவின் நுழைவு வாயில் என அழைக்கப்பட்ட நகரம் எது ?

13.இந்தியாவில் ஆங்கில கல்வி முறையை அறிமுகப்படுத்தியவர் யார் ?

14.இந்தியாவில் அதிகம் கிடைக்கும் தாது என்ன ?

15.இந்தியாவின் முதல் தனியார் ரேடியோ எஃப் எம் அலை வரிசை நிலையத்தின் பெயர் என்ன ?

16.இந்தியாவின் முதல் பெண்மணி யார் ?

17.இந்தியாவின் முதல் பெண் ஐ.பி.எஸ் அதிகாரி யார் ?

## முதல் நோபல் பரிசு



முதல் முதலாக சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவர் ஹென்றி டுனாண்ட். ரெட்கிராஸ் அமைப்பைத்தொடங்கி, போர்மூளும் நாடுகளுக்கு இடையே சமாதானம் ஏற்பட பாடுபட்டதற்காகவும், போர்க்களத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சேவை செய்ததற்காகவும் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.1901ம் ஆண்டு வழங்கப்பட்ட முதல் நோபல் பரிசை இவர் பெற்றார்.

எண்ணமே முன்னேற்றத்தின் ஆணிவேர். எண்ணம் காந்த சக்திகொண்டது. வசீகரிக்கும் தன்மை பெற்றது. ஆகவே நமது எண்ணங்கள் அதன் விளைவுகளைப் புறச்சூழ்நிலையில் உருவாக்கும் .எங்கே போக ஆசைப்படுகிறோமோ,அங்கே போக வழி பிறக்கும் பாதை அமையும்.வாழ்க்கை என்பது ,உள்ளிருந்து வெளியே போகும் ஒரு செயல் என்கிறார்கள் நாம் அச்செயலைப்புரிந்துகொள்ளவேண்டும்.விதை எப்படி தண்ணீர் பட்டவுடன் பூரித்து முளைவிடுகிறதோ ,அதேபோல எண்ணங்கள் ,மனத்திலேயே வளம்பெற்று வெடிக்க வேண்டும்.வெளிவரவேண்டும்.அதற்கு நாம் உள்ளத்தைப் பயன்படுத்தவேண்டும்.

எண்ணங்கள் பல்வேறாக பரவி இருப்பினும் குறிக்கோள் எனும்போது நமது எண்ணங்கள் ஒரு கொள்கையைச் சுற்றி,ஓர் ஆசையைச்சுற்றி பின்னப் படுகின்றன. எண்ணங்களை பரவவிடாமல் ஒருமுனைப் படுத்துதல் அவசியம்.ஊருக்குச் செல்லும் போது ரயில்வே நிலையத்திற்குச் சென்று ஐயா ஒரு டிக்கெட் கொடுங்கள் என்று கேட்பதில்லை.இன்ன ஊருக்குப் போகிறோம் என்ற திட்டம் நம்மிடம் இருக்கிறது.ஆனால் நம்மில் பலர் இன்றும் எவ்விதக் குறிக்கோளும் இன்றி வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்கிறோம்.

நாம் நம் மனத்திற்கு ஒரு திட்டத்தை,ஒரு தெளிவை ,ஒரு குறிக்கோளைக் கொடுக்கவேண்டும்.மனம் ஒரு அசாதாரண இயக்கம்.நாம் அதனிடம் ஒரு தெளிவான குறிக்கோளைக் கொடுத்துவிட்டோமானால் ,மனதிற்கு உத்தரவு போட்டுவிட்டோமானால் நிச்சயம் அது நம்மைஅந்த ஊருக்கு அழைத்துச்செல்லும்.மனம் என்றும் பொய்ப்பதில்லை. எண்ணங்கள் நெறிப்படுத்தப்படும்போது ,ஒழுங்கு படுத்தப்படும்போது அது குறிக்கோளாகிறது. லட்சியமாகிறது. வாழ்க்கையை நாம் எண்ணுகிறபடி நாம் அமைக்கமுடியும்.அதற்கு வேண்டிய மன உறுதியிருந்தால். திட்டங்கள் இருந்தால்.

வள்ளுவர் கூறுகிறார். விதியைப் புறமுதுகிடச் செய்யலாம். ஒரு குறிக்கோளை நோக்கி ஓயாது உழைத்தால் என்று. வாழ்க்கையில் நம்பிக்கை இல்லாதவர்களுக்குக் குறிக்கோள் ஏதும் இருப்பதில்லை. குறிக்கோள் என்பது வெறும் ஆசையல்ல. ஆசைக்கு மேல் அதிகம். நமக்கு அதில் ஈடுபாடு இருக்கவேண்டும். குறிக்கோளை நாம் உடலால் உணரவேண்டும். ரசிக்கவேண்டும். நுகரவேண்டும். நாம் அத்துடன் வாழவேண்டும். விவேகானந்தர் கூறினார்நீருக்குள் அமுங்கியிருப்பவன் வெளியே வர எப்படித் துடிக்கிறானோ அத்தகைய ஜீவ வேகம் நமக்கு வேண்டுமென்று. அத்தகைய துடிப்பு, குறிக்கோளை அடையும்போது, எண்ணங்கள் சித்தியாக, சாதனைகளாக மலர்கின்றன.

**நூலைப்படி** – பாவேந்தர் பாரதிதாசன்



நூலைப்படிசங்கத்தமிழ்
நூலைப்படிமுறைப்படி
நூலைப்படி
காலையிற்படி கடும்பகல் படி
மாலை,இரவு பொருள்படும் படி
சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக் கெல்லாம் தள்ளுபடி
சேதி அப்படி தெரிந்தபடி
தீமை வந்திடுமே மறுபடி (நூலைப்படி)
பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி(நூலைப்படி)
தொடங்கையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி
அடங்கா இன்பம் மறுபடி
ஆகும் என்ற ஆன்றோர் சொற்படி நூலைப்படி.

## கோவில் உச்சியில் ஆங்கிலேயர்? ஓர்புரியா புதிர்!



தஞ்சை பெரியகோவில் ஒரு பக்கத்தில் ஆங்கிலேயர் ஒருவர் தலையில் தொப்பி அணிந்தவாறு உள்ள சிற்பம் காணப்படுகிறது. பிற்காலங்களில்பிரிட்டிஷ்சார் இந்தியாவை ஆளப்போகிறார்கள் என்பதனை முன்னமேயே கணித்திருப்பதாகக்கருதப்படுகிறது என்றாலும் அச்சிற்பம் பெரியகோவில் உச்சியில் இருப்பதற்கான காரணம் நமக்குத் தெரியவில்லை.

# திருவிளையாட்டம் நண்பர்கள் குழு, சென்னை

## குடும்பத்தினருடன் கூடி மகிழும் விழா – 03.08.2025











# கார்குல கலாச்சார சங்கமம் - கும்பகோணம் - 10.08.2025






















# கார்குல கலாச்சார சங்கமம் - கும்பகோணம் - 10.08.2025





























ஒரு வருட பலனுக்கு நெல்லை நடுங்கள் !
முப்பது வருட பலனுக்கு மரங்களை நடுங்கள் !!
நூற்றாண்டு பலனுக்கு கல்வியை கொடுங்கள் !!!

NMP
CHARITABLE TRUST
giving is living

# N.M.P அறக்கட்டளை

## கல்வி உதவித்தொகை வழங்கும் விழா

## மருத்துவ முகாம்




என்றும் உங்கள் ஆதரவுடன்

**கஸ்தூரிபாய்** ®
**கம்பெனி – NMP ரெடிமேட்ஸ்**

Since 1943, Chidambaram.

32,33,34 மேல ரத வீதி, சிதம்பரம்.
போன்: 04144 – 222 228 | cc@kasthuribaicompany.com

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.










சிதம்பரம் கஸ்தூரிபாய் கம்பெனி NMP ரெடிமேட் & பலகாரம்.காம் **NMP அறக்கட்டளை கல்வி உதவித்தொகை வழங்கும் விழா** 31.07.2025 அன்று பலகாரம்.காம் ஆனந்தலஹரியில் நடைபெற்றது. அறக்கட்டளை தலைவர் திரு வி.முத்துக்குமார் மற்றும் திருமதி ஸ்ரீ வித்யா முத்துக்குமார் அனைவரையும் வரவேற்று விழாவை சிறப்பித்தனர். விழா சிறப்பு விருந்தினராக சிதம்பரம் வட்டத்தின் சார் ஆட்சியர் **திரு S. கிஷன்குமார் IAS** அவர்கள் கலந்து கொண்டு 60க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கி சிறப்பித்தார்கள்.

16.02.2025 அன்று 110க்கும் மேற்பட்ட மக்களுக்கு இலவச மருத்துவ முகாம், மேலும் 10.05.2025 அன்று 250க்கும் மேற்பட்ட மக்களுக்கு பாண்டிச்சேரி மகாத்மா காந்தி மருத்துவமனை இணைந்து மருத்துவ முகாம்கள் நடைபெற்றது.

KASTHURIBAI Company - NMP Readymades
Since 1943. Chidambaram.
Palagaram.com HIGH CLASS PURE VEG RESTAURANT
156, West car Street, Chidambaram.

# இலையூர் திரு. N. ராமசாமி பிள்ளை அவர்களின்
# நூறாமாண்டு பிறந்தநாள் நினைவு



5 வயதில் பெற்றோர் மற்றும் சகோதரியுடன்



20 வயதில் மனைவியுடன்

**நா. ராமசாமி பிள்ளை**
பிறந்தது : 06.09.1925
மறைவு : 09.02.2003

மணந்தது : 06.09.1945

**ரா. கோகிலாம்பாள்**
பிறந்தது : 27.01.1926
மறைவு : 25.04.2010

**மகன்கள் & மகள்கள்**

தெய்வதிரு. R. **இளங்கோ** – (நலமுடன்) திருமதி. I. **சாந்தா**
Kokila Agencies HP Dealers - Kudavasal

திருமதி. Ln. J. **திரிபுரசுந்தரி**, B.A. - Ln. திரு. K. **ஜெயகிருஷ்ணன்**, B.A.
GK Farms & Foods - (Savastha Food Products) லால்குடி

திரு. R. **நாராயணசாமி**, B.Sc. - திருமதி. N. **உஷா**
CUB Manager Rtd, Kumbakonam

திரு. R. **சந்திரமோகன்**, B.Sc. - திருமதி C. **கலா**, B.A.
Kokila Agencies HP Dealers - Kudavasal

திருமதி. R. **மணிமேகலை**, B.A. - திரு. Dr. S. **ராஜேந்திரன்**, MBBS, DLO
Senior Civil Surgeon Rtd. Kumbakonam

**Kokila Agencies** HPC Dealer - Kudavasal
Res. 24 (Old No. 28), Banadhurai West Kumbakonam

# இலையூர் திரு. N. ராமசாமி பிள்ளை அவர்களின்
# நூறாமாண்டு பிறந்தநாள் நினைவு

 

**60 வயதில் குடும்பத்தினருடன்**

| பேரன்கள்/பேத்திகள் | கொள்ளுபேரன்கள்/பேத்திகள் |
|---|---|
| திருமதி. I. **புவனேஷ்வரி** B.Com., PGDBM - திரு. J. **ராஜ்மோகன்** MCA, லால்குடி | R. **ஹரிணி** B.Tech. |
| திருமதி. I. **அனுக்ஷா** B.E. - திரு. G. **விஜய் வேல்முருகன்** B.E., சென்னை | V. **ராகுல்** B.Tech. |
| திரு. J. **ராஜ்மோகன்** MCA - திருமதி. I. **புவனேஷ்வரி** B.Com., PGDBM, லால்குடி | R. **ஹரிணி** B.Tech. |
| திரு. J. **விசுஷ்ணுமோகன்** MCA - திருமதி. U. **வைஷ்ணவி** MCA, Australia | V. **வர்ஷினி** B.Sc. (TT) |
| திரு. J. **மதன்மோகன்** M.Sc. - திருமதி. N. **காயத்ரி** M.Sc., Australia | M. **ஹம்ஷினி** |
| திருமதி. N. **சுகன்யா** B.E. - திரு. M. **காசிராமன்** B.E., Australia | K. **ராகவ்** |
| திரு. N. **சுதர்சன்** B.E./PGDBA - திருமதி. A. **அர்ச்சனா** B.E., Bangalore | K. **அஞ்சனா** |
| திருமதி. C. **கோகிலா** MBA - திரு. S. **வினோத்குமார்** M.Tech., Norway | V.K. **ப்ராப்தி,** V.K. **ப்ரணவ்** |
| திரு. R. **பாரி** B.E., PGDBA - திருமதி. R. **சுதா** B.E., சென்னை | P. **அவந்திகா** B.Tech. |
| திருமதி. R. **வர்த்தினி** B.E. - திரு. E. **விஷ்வசுந்தர்** B.Tech., Bangalore | V. **வர்ஷித்தா** B.Tech., V. **ஸ்ரீயா** |

*With best compliments from :*

**N.R. இயற்கை வேளாண் பண்ணை**

இலையூர், குடவாசல் Tk., திருவாரூர் Dt.
101 கும்பகோணம் L.F. மேயின் ரோடு, குடவாசல். செல் : 94439 74780

**G.K. FOODS**

**'SAVASTHA' Brand Natural Food Products**

*No. 8, North Street, Lalgudi, Trichy Dt.,*
Buy online@www.amazon.in, www.foodsnxt.com

# இதய அஞ்சலி



தோற்றம் :
30.7.1946

மறைவு :
7.8.2025

## M. அலமேலு அம்மாள்

மயிலாடுதுறை மாவட்டம், கடக்கம் கிராமம், தெய்வத்திரு. முத்துக்கிருஷ்ணப் பிள்ளை அவர்களின் துணைவியாரும் எங்களது அன்பு தாயாருமான திருமதி **M. அலமேலு அம்மாள்** அவர்கள் 7.8.2025 அன்று சிவலோக பதவி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னராது ஆத்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

தங்கள் நினைவில் வாழும்

| | |
|---|---|
| **மகன்கள் :** | **M. நடனசபாபதி** (ஆடிட்டர்) |
| | **M. லெட்சுமிநாராயணன்** |
| **மருமகள் :** | **N. மகேஸ்வரி** |
| | **L. சாந்தி துர்கா** |
| **மருமகன் :** | **V. சாயிகிருஷ்ணன்** |
| **மகள் :** | **S. வள்ளி** |
| **பேரன்கள் – பேத்திகள் :** | **R. ரிச்சி – R. இந்திரா பிரியதர்ஷினி** |
| | **L. முத்துகுமரன் – M. தீபிகா** |
| | **N. சபரிகிஷோர் – N. சாய்ஈஷ்வர்** |
| | **S. ஹரிஹரன்** |
| **கொள்ளுபேரன்கள் :** | **R. ஆதிரையன் – M. வியன்ராம்** |

## கார்குல திருநாள்
## கார்குல கலாச்சார சங்கமம்

'வரலாறு இல்லையெனில், ஒரு சமுதாயம் இல்லை; அதன் எதிர்காலமும் இல்லை' எனும் கூற்று, மற்றும் கிருஷ்ண பரமாத்மா நமது கலாச்சாரம், சடங்குகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமெனபகவத்கீதையின் 2ஆம் அத்தியாயத்தின் 42ஆம் சுலோகத்தில் கூறியுள்ள வண்ணமும், நமது கார்குல கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய பண்பாடுகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் நோக்கத்தில் நமது கார்குல குரு மணி தருமையாதீனம் அவர்களின் அருளாசியோடு கோவில் நகரமாம் கும்பகோணத்தில் கார்குலத் திருநாள், கார்குல கலாச்சார சங்கமமாக, செட்டி மண்டபம் பைபாஸில் அமைந்துள்ள மகாலட்சுமி மஹாலில் ஆகஸ்ட் மாதம் 10ஆம்நாள், ஞாயிற்றுக்கிழமையன்றுமிகவிமரிசையாக கொண்டாடப்பட்டது. முதல் நாள் மாலையே மண்டபத்திற்கு வந்து ஏற்பாடுகளை திருச்சி, குடந்தை, சென்னை மற்றும் விருத்தாச்சல சகோதரிகளும், சகோதரர்களும் நள்ளிரவு 12 மணி வரை கவனித்து செய்தது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

காலை உணவுக்கு முன் சுமார் 7.30 மணிக்கு விருத்தாச்சலம் மகளிர் அணியினைச் சார்ந்த திருமதி. சாந்தி ஜெயக்குமார் அவர்கள் போற்றி கூற, குடந்தை மகளிர் ஐவர், குத்து விளக்கின் ஐந்து முகங்களையும் மலர் கொண்டு வழிபட்டனர். விழாவின் முதல் நிகழ்வாக சுமார் 8.45 மணி அளவில் போற்றத்தக்க வாசகங்களுடன் கூடிய பதாகைகளைத் தாங்கிய வண்ணம், சுமார் 25 ஊர்களிலிருந்து வந்திருந்த மகளிர் பேரணியாக மண்டபத்தின் உள்ளே வர, தமிழ்நாடு கார்காத்தார் கூட்டமைப்பின் தலைவர், முனைவர் திரு. K.K.R.K. சுரேஷ் அவர்கள் கார்குலத்தின் கொடியினை ஏற்றி விழாவினைத் தொடங்கி வைத்தார். விழா அரங்கின் கீழ்த்தளத்தில் கார்குல சகோதரிகள் அவர்கள் பொருட்களை மொத்தம் 24 கடைகளில் காட்சிப்படுத்தியதுடன், விற்பனையும் செய்தனர். வருண பகவான் வரும் வரையில் கடைகளில் கூட்டம் அலைமோதியதாக தெரிவித்தனர்.

விழாவின் முதல் நிகழ்வு: குத்து விளக்கேற்றுதல், கடவுள் வாழ்த்து, கார்குலத்தின் இனப்பாடல் மற்றும் சிறுமி சாதனாவின் வரவேற்பு நடனத்துடன் காலை நிகழ்ச்சி தொடங்கியது. மேடையை இவ்விழாவினை ஒருங்கிணைத்த ஐவர் குழுவான திருமதி. சரஸ்வதி பாலசுப்ரமணியம், திருமதி. சாந்தி சிவகுமார், திருமதி. மைதிலி வைத்தியநாதன், திருமதி. வனஜா இளங்கோவன் மற்றும் திருமதி கலையரசி ராஜசேகரன் அலங்கரிக்க, அவர்களைப் பாராட்டி நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. திருமதி அம்பிகா மதி நெறியாளராக திறம்பட காலை நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். துணைத்தலைவி திருமதி. கலையரசி வரவேற்பு உரை நல்கிட, அமைப்பாளர் திருமதி. சரஸ்வதி விழாவின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார். பொருளாளர் திருமதி. மைதிலி முன்னிலை உரையை கவிதையாகப் பொழிய, செயலாளர் திருமதி. சாந்தி விரிவாக நோக்க உரையாற்றினார். கௌரவத் தலைவி திருமதி வனஜா, போட்டிக் குழுவின் தலைவி திருமதி கிருஷ்ணவேணி, திருமதி லலிதா, திருமதி. இந்து மற்றும் பலர் குழந்தைகளுக்கான இறுதிச் சுற்று போட்டிகளை நடத்தி பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

இரண்டாம் நிகழ்வு: சுமார் 11 மணி அளவில் விழாவின் முக்கிய நிகழ்வான கார்குலத்தின் சிறந்த சாதனைப் பெண்களைப் பாராட்டும் நிகழ்வு நடைபெற்றது. தலைமையேற்பதாக இருந்த திருமதி. ராதா செல்வி வெங்கடேசன், (CEO Interlace India Pvt. Ltd) வர இயலாத சூழ்நிலை, எனினும் அவரின் சாதனைகள் எடுத்துக் கூறப்பட்டது. ஏனைய சாதனையாளர்களான டாக்டர் V. மாதினி – தகைசால் மகப்பேறு மருத்துவர், முனைவர் மைதிலி சோமசுந்தரம் – Additional Registrar, SRM Medical College, திருமதி. ரூப்மதி ஆனந்த் – புகழ்பெற்ற கட்டிடக் கலை நிபுணர், டாக்டர் செல்வி. உலகம்மாள் – a well known motivational speaker, திருமதி. ஷம்மிரத்னா, சிதம்பர நகரத்தின் சிறந்த கல்வியாளர்; தாளாளர் எடிசன் குழுமப் பள்ளிகள், திருமதி. கார்குழலி, குத்தாலத்தில் வளர்ந்து வரும் இளம் தொழிலதிபர் ஆகியோர் பாராட்டப்பட்டனர். அவர்களும் நமது மக்களுக்கு அருமையானதொரு ஏற்புரை நிகழ்த்தி சிறப்பித்தனர்.

மூன்றாம் நிகழ்வு: சுமார் காலை 12 மணி அளவில் டாக்டர் ஞானவதி அசோகன் தலைமையில் குழந்தைகள் ஐவர், கார்குலப் பண்புகளான விருந்தோம்பல், வாக்குத் தவறாமை, பக்தி, நேர்மை, ஆளுமைத்திறன் குறித்து பேசிய மிகச் சிறப்பானதொரு கருத்தரங்கம் நடந்தது. இடை இடையே நடனத்தில் பரிசு வாங்கிய சிறுமிகள் தங்கள் திறமைகளை அரங்கேற்றி பரிசுகளைப் பெற்றனர். போட்டியில் வென்ற சிலர் தங்கள் திறமைகளை அரங்கேற்றியதும் காலை நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

மதிய உணவுக்குப் பின், சுமார் 2¼ மணிக்கு அடுத்த நிகழ்வான கார்குலத் தலைவர்களைப் பாராட்டுவதும், அவர்கள் வாழ்த்துரை வழங்கும் விழாவும் ஆரம்பமானது. மதியநிகழ்வின் நெறியாளரான திருமதி. கலையரசி அவர்கள் சிறப்பு விருந்தினர்களை

அறிமுகம் செய்வித்து சிறப்புடன் நிகழ்வினை நடத்திச் சென்றார். தலைவர், முனைவர் திரு. K.K.R.K. சுரேஷ், பொதுச்செயலாளர் திரு. M. பாலசுப்ரமணியன், பொருளாளர் திரு. G. ராமநாதன், அமைப்புச் செயலாளர் திரு. கைலை. சண்முகம், குடந்தை சங்கத் தலைவர் திரு. T.M. வைத்தியநாதன், மாநிலத் தலைமை நிலைய செயலர் திரு. குமார், சிறப்பு விருந்தினர்களான சமூக ஆர்வலர் ஆனந்தம் திரு. செல்வகுமார், இளம் கணினி நிபுணர் திரு. V. விஜய் ஆனந்த் ஆகியோர் மேடையை அலங்கரிக்க, திருமதி. வனஜா வரவேற்புரை ஆற்றிட, தலைவர்கள் கௌரவிக்கப்பட்டனர். பின் விழாவின் நோக்க உரையினை திருமதி. சரஸ்வதி குழந்தைகள் புரிந்து கொள்ளும் வண்ணம் உரையாற்றினார். அதன் பின் கார்குல வரலாறு வீடியோ வெளியிடப்பட்டது. அனைவரும் மிகுந்த ஆர்வத்துடன் ரசித்துப் பார்த்து மகிழ்ந்தனர். அதன்பின் தலைவர்கள் மேடையேறி விழாவிற்கு வாழ்த்துரை வழங்கி, மகளிர் அனைவரையும் பாராட்டினர். குடந்தை சங்கம் முதலில் தலைவர்களுக்கும், ஐவர் குழுவினருக்கும் மரியாதை செய்ய, அதன் பின் ஏனைய சங்கங்களும் முன்வந்து மரியாதை செய்தனர். குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. சில குழந்தைகள் கவிதைகள் கூறினர். சமூக ஆர்வலர் திரு. ஆனந்தம் செல்வகுமார் அவர்களும், இளம் கணினி நிபுணர் திரு. விஜய் ஆனந்த் அவர்களும் பார்வையாளர்களுக்கு நல்லதொரு சிறப்புரை வழங்கினர்.

இம் மகளிர் விழாவைச் சிறப்பாக நடத்திய பொறுப்பாளர்கள் மற்றும் அனைத்து ஊர்களில் இருந்தும் வந்திருந்த மகளிர் குழுவின் பொறுப்பாளர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர். போட்டியில் கலந்துகொண்ட அனைத்து குழந்தைகளுக்கும் கோப்பைகள் அளித்து சிறப்பிக்கப்பட்டது. விழாவுக்கு வருகைபுரிந்த சுமார் 220 குழந்தைகளுக்கும் 'உண்டியல்' நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது. விழாவுக்கு வருகை புரிந்த ஆடவர்கள் துண்டு அணிவித்து வரவேற்கப்பட்டனர். மகளிர் அனைவருக்கும் நினைவுப் பரிசாக கைப்பை வழங்கப்பட்டது. அருமையானதொரு நன்றியுரையை மயிலாடுதுறை மகளிர் அணியின் திருமதி. கோமதி ரத்னகுமார் வழங்கிட, நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

சுமார் 2 மாத காலமாக யோசித்து, பலரின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட இவ்விழா எங்களுக்கு (மகளிருக்கு) புதிது. கன்னி முயற்சி; இத்தகைய ஆரவாரத்துடன் சிறப்பாக நடந்ததற்கு கடவுளுக்கு நன்றி கூற நாங்கள் ஐவரும் கடமைப்பட்டுள்ளோம். அவரவர் ஊர்களில் போட்டி நடத்தி, முதல் இரு பரிசுகளைத் தேர்ந்தெடுத்து, இறுதிச் சுற்றுக்கு அழைத்து வந்த அனைத்து மகளிர் அணி பொறுப்பாளர்களையும் இத்தருணத்தில் பாராட்டுகிறோம். முதல் நாளே அரங்கிற்கு வந்திருந்த அனைத்து வேலைகளையும் பகிர்ந்து செய்த சகோதர, சகோதரிகளுக்கு எங்களின் இருகரம் கூப்பிய வணக்கங்கள், சில குறைகள் இருப்பினும், நாங்கள் எங்களால் இயன்ற அளவு கலாச்சாரத்தினையும், பண்பாட்டினையும் அடுத்த தலைமுறைக்கு கடத்தியுள்ளோம் என எண்ணுகிறோம். பெற்றோர் சிலர் எங்கள் குழந்தைகள் கூகிளில் கார்காத்தார் வரலாறு, பண்பாடு தேடி எடுத்து பேச்சுப் போட்டிக்கும், கவிதைப் போட்டிக்கும் தயார் செய்தார்கள் எனக் கூறியதைக் கேட்டபோது, நாங்கள் நினைத்தது ஓரளவு நடந்துவிட்டது என்று மகிழ்ச்சி கொண்டோம். எங்களுடன் இவ்விழா வெற்றி பெற பாடுபட்ட அனைத்து குழுக்களின் (வரவேற்பு, போட்டிகள், பரிசு, உணவு, மேடை நிர்வாகம் மற்றும் ஒலி, ஒளிக் குழுக்கள்) மகளிருக்கும், பரிசுப் பொருட்கள் வாங்கிட உதவிய மண்டலச் செயலாளர் திரு. தியாகராஜன் அவர்களுக்கும், குறிப்பாக இவ்விழாவினை நடத்த பிள்ளையார் சுழி போட்டதிலிருந்து, இடம் தேர்ந்தெடுப்பது முதல் எல்லாவற்றிலும் எங்களுக்கு உறுதுணையாக இருந்த தமிழ்நாடு கார்காத்தார் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் திரு. M. பாலசுப்ரமணியன் அவர்களுக்கும், பரிசுக் குலுக்கலுக்கான பல பரிசுப் பொருட்களை கொடுத்துதவிய கூட்டமைப்பின் தலைவர் திரு. K.K.R.K. சுரேஷ் அவர்களுக்கும், எங்களுக்கு இவ்விழாவிற்கான தைரியம் கொடுத்து, ஊக்குவித்த கூட்டமைப்பின் பொருளாளர் திரு. G. ராமநாதன் பிள்ளை அவர்கள் மற்றும் அமைப்பாளர் திரு. கைலை. சண்முகம் அவர்களுக்கும், குடந்தையில் தேவையான அனைத்து உதவிகளையும் எங்களுக்களித்த குடந்தை நகர கார்காத்தார் சங்கத் தலைவர் திரு. T.M. வைத்தியநாதன் அவர்களுக்கும், அவர்கள் தலைமையிலான குழுவினருக்கும், விழாவிற்குத் தேவையான நிதி உதவியினை வாரி வழங்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எங்களின் கோடானு கோடி வணக்கங்களும்! நன்றிகளும்!

கலாச்சார சங்கம குழு

திருமதி. சரஸ்வதி பாலசுப்ரமணியன்

திருமதி. சாந்தி சிவகுமார்

திருமதி. மைதிலி வைத்தியநாதன்

திருமதி. வனஜா இளங்கோவன்

திருமதி. கலையரசி ராஜசேகரன்

## பட்டா மாற்றம்

சாதாரணமாக ஏதேனும் ஒரு அசையா சொத்து வாங்கியவரிடம் அவரது நண்பர்கள் பட்டா மாற்றிக் கொண்டு விட்டீர்களா என்று கேட்பதும், அதற்கு அந்த சொத்து வாங்கியவர்," அதெல்லாம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சொத்து வாங்கிய பத்திரமும் அதற்கான ஈ சியும் என்னிடம் உள்ளது என்று கூறுவது பல இடங்களில் நடப்பது வாடிக்கை. அதைப்போல் ஒரு சிலர் தங்க:ள் சொத்து பற்றிய ஈசீ எனப்படும் வில்லங்கச்சான்று இருந்தாலே அது சொத்துரிமைக் கான ஆவணம் என்றும் தவறாக நினைத்து விடுகிறார்கள்.

ஒரு சொத்துக்கான பட்டாவை மாற்றுவது எப்படி என்று பார்க்கும் முன்பாக, பட்டா என்றால் என்ன, அது சொத்துரிமை ஆவணமாகுமா வில்லங்க சான்று என்றால் என்ன போன்ற சில விபரங்களைப்பற்றி சிறிது பார்ப்போம்.

### அசையா சொத்து மாற்றம்

நம்முடைய நாட்டில் அசையா சொத்துரிமை ஒருவரிடமிருந்து மற்றவருக்கு மாறும் போது அதனுடைய மதிப்பு ரூ 100 க்கு மேல் இருந்தால் Transfer of Property Act எனப்படும் சொத்து பரிமாற்றச்சட்டப்படி. அந்த பரிமாற்றம் எழுத்து வடிவில் உரிய முத்திரைத்தாளில் எழுதப்பட்டுப் பதிவு செய்யப்பட வேண்டியது சட்ட பூர்வ தேவை ஆகும் அவ்வாறு எழுதிப் பதிவுசெய்யப்பட்ட ஆவணமே அந்த சொத்துரிமைக்கான ஆவணமாகும் மூலப்பத்திரம் உதாரணம் : பாகப்பிரிவினைப்பத்திரம், கிரையப்பத்திரம்,செட்டில்மெண்ட் எனப்படும் அறுதியா வணப்பத்திரம், பரிவர்த்தனைப் பத்திரம் போன்றவை

### வில்லங்க சான்றிதழ்

வில்லங்க சன்றிதழ் Registration Department எனப்படும் பதிவுத் துறையால், வழங்கப்படும் ஒரு சான்றிதழ். அதில் அந்த சொத்து பற்றிய நடவடிக்கைகள், அதாவது கிரையம் அடமானம் பரிவர்த்தனை போன்ற பல் வேறு நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கும், ஆனால் அது சொத்துரிமைக்கான ஆவணமாகாது.

### பட்டா என்றால் என்ன ?

அடங்கல் மற்றும் பட்டா என்பவை அரசின் வருவாய்த்துறை ரெவின்யூ டிபர்ட்மெண்ட் டினரால் அந்த பகுதியில் உள்ள அசையா சொத்துக்கள் பற்றி பேணப்பட்டு வரும் ஆவணம் மற்றும் பதிவேடுகள் ஆகும் அடங்கலில் அந்த குறிப்பிட்ட சொத்தில் என்ன பயிரிடப்படுகிறது என்ற விபரம் அந்த கிராம நிர்வாக அலுவலரால் பேணப்படும்

பட்டா என்பது அந்த குறிப்பிட்ட நில அளவை எண் சர்வே நம்பர் யாருக்குச் சொந்தமானது யார் அனுபோகத்தில் உள்ளது என்பதைக் குறிக்கும். அதாவது ஒரு அசையா சொத்தின் உரிமையாளர் யார் அது யார் அனுபோகத்தில் Possession உள்ளது என்பதைக் குறிக்கும் வருவாய்த்துறை ஆவணம்தான் பட்டா வாகும்.

ஒரு அசையா சொத்தின் உரிமையை நிலை நாட்டுவதற்கு பட்டா மட்டும் இருந்தால் போதுமா கிரைய பத்திரம் செட்டில்மெண்ட் பாகப்பிரிவினை போன்ற ஆவணங்கள் தேவை இல்லையா என்று கேட்டால் " ஆம் " என்று சொல்ல இயலாது. ஏனென்றால் ஒரு அசையா சொத்தின் உரிமையை நிலை நாட்ட அத்தகைய சட்ட பூர்வ ஆவணங்கள் தேவைதான்.

அத்தகைய சட்ட பூர்வ ஆவணங்கள் இல்லாத இனங்களில், உதாரணமாக கிராமப்புறங்களில் பல ஆண்டுகளாக பூர்வீக மாக பாத்தியப்பட்ட விவசாய நிலங்கள் , அரசால் இலவசமாகக் கொடுக்கப்பட்ட வீட்டு மனை அல்லது விவசாய நிலம் போன்றவற்றுக்கு கிரைய பத்திரம் போன்ற ஆவணங்கள் இருக்காது. அப்போது பட்டாதான் அவர்களது உரிமையை நிலை நாட்டக்கூடிய ஆவணமாக இருக்கும்.

### பட்டா ஏன் தேவை ?

#### 1. உரிமையை நிலை நாட்ட

ஏற்கனவே சொன்ன மாதிரி சுயார்ஜித சொத்துக்களுக்கு கிரைய பத்திரம், செட்டில்மெண்ட் போன்ற சட்ட பூர்வ ஆவணங்களும் கிராமப்புறங்களில் உள்ள பூர்வீக சொத்துக்களுக்கு பாகப்பிரிவினை போன்ற குடும்ப ஆவணங்களும் இல்லாத இனங்களில் அந்த சொத்தின் உரிமையை நிலை நாட்ட வருவாய்த்துறை அளிக்கும் பட்டா உதவும்.

#### 2. அரசு உதவிகள் கிடைக்க

அதாவது கிரைய பத்திரம் போன்ற ஆவணங்கள் இருந்தாலும் இல்லா விட்டாலும் அரசின் வருவாய்த்துறையைப் பொறுத்த வரை பட்டா தான் ஒரு சொத்தின் உரிமையைக் குறிக்கும் ஆவணமாகும். அரசு அளிக்கும் மான்யம் அல்லது இதர உதவிகள் அந்த பட்டாவின் அடிப்படையில்தான் வழங்கப்படும்.

#### 3. அனுபோகத்தை நிரூபிக்க

அசையா சொத்துக்களின் உரிமை நம்மிடம் இருந்தாலும் அச் சொத்துக் கள் நம்முடைய பொசஷன் என்னும் அனுபோகத்தில் இருக்க வேண்டியது அவசியம். கட்டிடம் அல்லது வீடு போன்றவை உள்ள அசையா சொத்துக்களில் நாம் குடியிருப்பது, வாடகைக்கு விட்டிருந்தால் வாடகைப் பத்திரம் மற்றும் நகராட்சிக்கு செலுத்தும் வீட்டு வரி மற்றும் குடி நீர் வரி போன்றவைகள் மூலம் அனுபோகத்தை எளிதாக நிரூபிக்கலாம். ஆனால் வீட்டு மனை அல்லது விவசாய நிலம் போன்ற கட்டிடம் ஏதும் இல்லாத அசையா

சொத்துக்களைப் பொறுத்தவரை அனுபோகத்தை நிரூபிக்க எந்த ஆதாரமும் காட்ட இயலாது. அந்த நேரங்களில் அனுபோகத்துக்கு ஆதாரமாகக் காட்ட வருவாய்த்துறையினால் வழங்கப்படும் பட்டா உதவிகரமாக இருக்கும்.

### 4. வங்கிக் கடன்களுக்கு

சென்னை போன்ற பெரு நகரங்களிலும் கோடிக் கணக்கில் மதிப்புள்ள வீட்டு மனையில் வீடு கட்டுவதற்கு லட்சக் கணக்கில் கடன் வழங்கும் வங்கிகள், கடன்தாரர் ஐ.டி. கம்பெனியில் லட்சக்கணக்கில் சம்பளம் வாங்கிக் கொண்டு அடமானமும் எழுதிக் கொடுத்தாலும் அந்த மனை வாங்கிய மூலப்பத்திரங்களை ஒப்படைத்தாலும் அந்த மனைக்கான பட்டா அவர் பெயரில் இருக்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

எனவேதான் நம்முடைய அசையா சொத்துக்கான மூலப்பத்திரமும் இதர ஆவணங்களும் இருந்தாலும் வருவாய்த்துறையினரால் வழங்கப்படும் பட்டா வையும் பெற வேண்டிய தேவை ஏற்படுகிறது.

### எந்த இனங்களில் பட்டா மாற்றம் தேவை ?

சாதாரணமாக ஒரு அசையா சொத்தினை கிரையம் மூலம் வாங்கும் போது பட்டாவை வாங்குபவர் பெயருக்கு மாற்றுவதற்காக தனக்கு ஆட்சேபணை இல்லை என்று விற்பவரிடம் ஒப்பம் பெற்று பதிவாளர் அலுவலகத்தில் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தாலும் நடை முறையில் வருவாய்த்தறை ஆவணங்களில் பட்டா மாற்றம் உடனே ஏற்படுவதில்லை. கிரையம் பெற்றவர் திரும்பவும் வருவாய்த்துறை வட்டாட்சியருக்கு மனு கொடுத்து பட்டாவை தன் பெயருக்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போல் உயில் செட்டில் மெண்ட் மூலம் சொத்து பெற்றவர்களும் நடவடிக்கை எடுத்து தங்கள் பெயருக்கு மாற்றம் செய்து கொள்ள வேண்டும்.

### யாரால் பட்டா வழங்கப்படும் ?

சாதாரணமாக வருவாய்த்துறை அதிகாரியான தாசில்தார் எனப்படும் வட்டாட்சியர் தான் பட்டா வழங்கும் அதிகாரம் படைத்தவர். ஆனால் சில சந்தர்ப்பங்களில் சூழ் நிலைக்கு ஏற்ப இதர அதிகாரிகளுக்கும் அந்த அதிகாரம் கொடுக்கப்படும்

### பட்டா மாற்றத்துக்கு நடவடிக்கை எடுப்பது எப்படி ?

யார் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்படவேண்டுமோ அந்தப்பகுதி வட்டாட்சியருக்கு மனு செய்து தக்க ஆவணங்களையும் இணைத்து உரிய கட்டணம் செலுத்தி சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அதிகாரி மூலமாக மனுவைக் கொடுக்க வேண்டும்

### இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

1.எந்த ஆவணத்தின் மூலம் சொத்துக்கான உரிமை கிடைத்ததோ அந்த மூலப்பத்திரம் ஆவணத்தின் நகல்.

2. அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டதைக் குறிக்கும் வில்லங்கச் சான்றிதழ் மனு செய்யும் காலம் வரைக்குப் பெற்று இணைக்க வேண்டும்.

3, அந்த வில்லங்க சான்றிதழில் வேறு நடவடிக்கைகள் வெளிப்பட்டிருந்தால் அந்த நடவடிக்கைக்கான ஆவணங்களின் நகல்கள்.

4, நிலத்தை விற்றவர் பெயரிலோ அல்லது வேறு எவர் பெயரிலோ அந்த சொத்துக்கு ஏற்கனவே பட்டா வழங்கப்படிருந்தால் அந்த பட்டாவின் நகல்

### மேல் நடவடிக்கை

அவ்வாறு பட்டா மாறுதலுக்கு விண்ணப் பித்தவுடன் கிராம நிர்வாக அலுவலர் அல்லது நில அளவையாளர் போன்ற வருவாய்த்துறை அதிகாரிகள் தேவைப்பட்டால் அந்த சொத்து இருக்கும் இடத்துக்கு வந்து அதில் குறிப்பிட்ட அளவுகள் சரியாக உள்ளனவா என்று சரி பார்ப்பார்கள். மனுதாரருக்கு முந்தின சொந்தக்காரர் பெயரில் பட்டா ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தால் மனுதாரர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்வது எளிதாக விரைவில் முடிந்து விடும். அப்படி அவர் பெயருக்கும் பட்டா மாற்றம் செய்யப்படாதிருந்தால், வருவாய்த்துறையால் பேணப்படும் சிட்டா போன்ற பதி வேடுகளில் அந்த குறிப்பிட்ட சர்வே எண் யார் பெயரில் உள்ளது என்பதைப் பார்ப்பார்கள்.

வருவாய்த்துறை ஆவணங்களில் கடைசியாக அந்த நில அளவை எண்ணுக்கான பட்டா யார் பெயரில் உள்ளதோ அவருக்கு எந்த ஆவணம் மூலம் அந்த சொத்து கிடைத்ததோ அந்த ஆவணத்தின் நகல் மற்றும் அவரிடமிருந்து மனுதாரருக்கு அந்த சொத்து மாற்றம் ஏற்பட்டது வரையில் தொடர்ச்சியாக உள்ள ஆவணங் களின் நகல்களையும் கொடுக்க வேண்டியிருக்கும்.,

அதன் பிறகு அந்த சர்வே எண் முழுவதற்கும் மனுதாரர் உரிமையாளராக இருந்தால் அவர் பெயரில் மாற்றம் செய்து கொடுத்து விடுவார்கள். அந்த சர்வே எண்ணில் ஒரு பகுதி மட்டும் தான் மனுதாரருக்குச் சொந்தம் என்றால் அந்த சர்வே எண் சப் டிவைட் என்று சொல்லக்கூடிய உட் பிரிவு செய்யப்பட்டு அதன் பிறகு அவர் பெயருக்கு மாற்றம் செய்யப்படும் . உட் பிரிவு செய்ய நேர்ந்தால். முதலில் உட் பிரிவு செய்யப்பட்டு பிறகு பட்டா மாற்றம் செய்ய கூடுதல் கால அவகாசம் தேவைப்படும்.

**அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கு பட்டா வழங்கப்படுமா ?**

பட்டாவில் ஒரு குறிப்பிட்ட நிலம் மற்றும் அதில் உள்ள கட்டிடம் பற்றிக் குறிப்பிட்டாலும் பட்டா என்பது நிலத்தைப்பற்றிய ஆவணமே ஒழிய கட்டிடங்களுக்கானது அல்ல . அடுக்கு மாடி குடியிருப்புகளைப் பொறுத்தவரை அதில் FLAT எனப்படும் குடியிருப்பு வாங்கியுள்ள அனைவருக்கும் குடியிருப்பு கட்டப்பட்டுள்ள அடி மனையில் குறிப்பிட்ட அளவிற்கு பிரிபடாத பாகத்தை அன் டிவைடெட் ஷேர் உரிமையாகப் பெற்றிருப்பார்கள். அடி மனை குடியிருப்பு வாங்கியுள்ள அனைவருக்கும் விகிதாச்சார அடிப்படையில் உரிமை இருக்கும் அதாவது அனைவரும் கூட்டு உரிமையாளர்கள். அந்த மாதிரி இனங்களில் பட்டா வழங்கப்பட்டால் அனைத்து உரிமையாளர்கள் பெயரிலும் கூட்டுப் பட்டாவாகத்தான் வழங்கப்படும். Un divided Share எனப்படும் பிரிபடாத பாகங்களுக்கு தனியே பட்டா வழங்கப்பட மாட்டாது

**எல்லா பட்டாக்களிலும் sketch எனப்படும் வரை படம் இருக்குமா ?**

மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பேணப்படும் Permanent Land Register எனப்படும் நிரந்தர நில பதிவேடு மற்றும் Town Survey Land Register எனப்படும் நகர நில கணக்கெடுப்புப் பதிவேடு எடுக்கப்படும் பட்டாக்களில் மட்டுமே டோபோ ஸ்கெட்ச் எனப்படும் நிலத்தின் அளவுகளுடன் கூடிய வரை படம் கொடுக்கப் பட்டிருக்கும். விவசாய நிலங்களுக்கு அப்படிப்பட்ட வரைபடம் கொடுக்கப் படுவதில்லை இந்தப் பதிவேட்டின் நகலில் சொத்து நிலம் மற்றும் வீடு இருக்கும் தெருவின் பெயர், மனை/ வீட்டு கதவு எண், நில உரிலமையாளர் பெயர் மற்றும் நிலத்தின் அளவுகள் . முன்பெல்லாம் அளவுகள் கிரவுண்டு சதுர அடியில் இருக்கும் இப்போதெல்லாம் ஹெக்டேர் ஏர் மற்றும் சதுர மீட்டரில் கொடுக்கப் பட்டிருக்கும்

1 hectare = 100 ares 1 are = 1076 square feet

1 are = 100 sq.meter. 1 sq.meter = 10.7639 sft

தமிழக அரசின் 2011 ஆம் ஆண்டு ஜூலை 8 தேதியிட்ட அரசாணை எண் 210, மற்றும் இந்து.காம் ,டி என் கவ.இன், ரமணன் 50 போன்ற இணைய தளங் களிலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம் சென்னை 97 போன் 98413 73184

## வாழ்த்துகிறோம்




எனது பேரன் **ச. விக்னேஷ்** PSG இன்ஜினியரிங் கல்லூரியில் (மெக்கானிக்கல் பிரிவு) தங்கப்பதக்கம் பெற்றுள்ளார் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். விக்னேஷ் மேலும் படித்து பல சாதனைகள் புரிய உங்கள் அனைவரின் ஆசீர்வாதத்தை வேண்டுகிறேன்.

**பூ. பழமலை பிள்ளை**

மேனாள் கார்காத்தார் சங்கத்தலைவர் விருத்தாசலம் வட்டம்



# சிறுவர் பகுதி



தயாரிப்பு **தஞ்சை தியாகு**

அலைபேசி: **94437 00375**

Email: thiagu1943@gmail.com

வணங்கத் தொடங்கும்போதே வளரத்தொடங்குகிறோம்!

## தடைகளை தாண்டிச்செல்



ஒரு குரு மரத்தடியில் இளைப்பாறிக் கொண்டிருந்தார். சீடன் விளையாட்டாக மரத்தில் ஏறிக் கொண்டிருந்தான். அங்கே வண்ணத்துப் பூச்சியின் வலைப் பின்னலைக் கண்டான். அதிலிருந்த வண்ணத்துப் பூச்சிப் பின்னலை விட்டு வெளியே வர திணறிக் கொண்டு இருந்தது. குழப்பத்துடன் சீடன் ரொம்பவும் சிரமப்படுகிறதே! அதற்கு உதவி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் அதை நெருங்கினான்.

கண்விழித்த குரு சீடனைக் கண்டார். சும்மா இரு ! அதன்போக்கிலேயே விட்டுவிடு ! என்று சொல்லிவிட்டு மீண்டும் உறங்கினார். சீடனுக்கு மனம் கேட்கவில்லை. குருவுக்குத் தெரியாமல், தடுமாறும் அந்தப்பூச்சியை பின்னல் கூட்டிலிருந்து விடுவித்தான். ஆனால், அந்த பூச்சி பறக்க முடியாமல் தரையில் விழுந்தது. கண்விழித்த குரு சீடனை நோக்கி, சொல்லியும் கேட்கவில்லையே! அதன் சிறகை சேதப்படுத்திவிட்டாயே! வண்ணத்துப் பூச்சி பறக்க வேண்டுமானால், அது தானாகவே கூட்டைவிட்டு வெளியே வந்திருக்கவேண்டும் என்று கடிந்து கொண்டார். வண்ணத்துப் பூச்சி மட்டுமல்ல! மனிதனுக்கும் இது பொருந்தும். வாழ்வில் குறுக்கிடும் கஷ்ட நஷ்டங்களுக்காக பிறரது உதவியை நாடக்கூடாது. அவனாகவே சமாளிக்கும் ஆற்றலைப் பெறவேண்டும். விடாமுயற்சியுடன் செயலாற்றினால்தான், தடைகளைத் தாண்டி உயரமுடியும்.

## விடுகதைகள்

1.கட்டைபோலிருந்தவனை வெட்டிப்பிழிந்தால் இனிப்போ இனிப்பு. அது என்ன ?
2.ஒட்டுத் திண்ணையில் தடுக்குப் போட்டேன் எடுக்க முடியலை. அது என்ன ?
3.சின்னச் சின்னப் பெட்டிக்குள்ளே சேதியெல்லாம் கண்ணுக்குள்ளே.அது என்ன ?
4.கறுத்தமேகம் கண்ணீர் விடும்போது கறுத்த காளான் கம்பியில் படருது.அது என்ன ?
5.ஊசி நுழையாத கிண்ணத்தில் ஒரு ஆழாக்குத் தண்ணீர்.அது என்ன ?
6.ஒட்டி வளர்ந்தாலும் அவனை வெட்டி எறிவோம்.அவன்யார் ?
7.ஓராண்டு உயிர் வாழ்வான்.ஒயிலாகக் காட்சி தருவான்.அவன் யார் ?
8.ஒருவனைக் கூப்பிட்டால் ஊரையே கூட்டுவான்.அவன் யார் ?
9.வேகாத வெயிலில் வெள்ளையன் விளைகிறான்.அவன் யார் ?
10.வண்ணத்தில் சிவப்பழகன்.வாய்க்குள் செய்தி வாங்குவான்.அவன்யார் ?
11.அழுவேன்,சிரிப்பேன்,அனைத்தும் செய்வேன்.நான்யார் ?
12.அணில் ஏறாத கொம்பு.என்ன கொம்பு ?

## கணிதப்புதிர் :

ரோமன் எண் XI- ஐ எழுதிக் கொள்ளுங்கள்.இதன் மதிப்பு 11ஆகும். இந்த ரோமன் எண்ணுடன் ரோமன் 1க்குச் சமமான கோடு ஒன்றினை (–) படுக்கை வசமாகவோ, செங்குத்தாகவோ, சாய்வாகவோ போட்டு அதன் மதிப்பை 10க்குச் சமமாக்க வேண்டும். மூன்று விதங்களில் இதைச் செய்யமுடியும்.முயற்சித்துப் பாருங்களேன்.



**நன்றற்றால் உள்ளும் தவறு உண்டு அவரவர்**
**பண்பு அறிந்து ஆற்றாக் கடை.**

திருக்குறள்

அவரவர் இயல்பறிந்து, அவரவர்க்குத் தகுந்தபடி செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் நல்லது செய்தாலும் குற்றமுண்டாகும்.

## பிரச்சனைகளுக்குத் தீர்வு

நகரத்தில் வாழ்ந்த இளைஞன் ஒருவன் தனது அன்றாட பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு மாறுதல் தேடவேண்டி தன் சொந்த கிராமத்திற்குச் சென்றான். அந்த ஊருக்கு மிகவும் சிறிய வயதில் பெற்றோருடன் சென்றதுதான். தற்போது அதிகம் நினைவில்லை என்றாலும் தன்னை யாரென்று கூறிக்கொண்டு கிராமத்தை சுற்றிப்பார்த்தான். அங்குள்ள கோவிலின் சிறப்பை கேள்விப்பட்டு அங்கு சென்றான்.அக்கோவிலின் வாயிலில் இருந்த பெரியவர் இளைஞனை விசாரிக்க ,தனது பெயரையும்,யார் என்பதையும் நகரத்தின் பிரச்சனை நிறைந்த வாழ்க்கை யிலிருந்து விடுபட்டு அமைதிதேட வந்திருப்பதாகவும் கூறினான்.அப்பெரியவரும் எண்ணை நிரம்பிய கிண்ணம் ஒன்றினை அவன் கையில் கொடுத்து உள்ளாக சிறந்த ஓவியங்கள் நிரம்ப உள்ளன,கண்டு வா !அதே நேரம் கிண்ணத்திலுள்ள எண்ணையை மட்டும் சிந்தாமல் கவனம் செலுத்தி வா ! என்று கூறி அனுப்பினார்.உள்ளே சென்றவன் வெளியே வந்ததும் பெரியவர் கேட்டார். சித்திரங்களைப் பார்த்தாயா ? இளைஞன் கூறினான், எப்படி ஐயா பார்ப்பது ? எனது கவனம் முழுவதும் எண்ணைக் கிண்ணத்தின் மீதல்லவா இருந்தது என்றான்.பெரியவர் கூறினார். பிரச்சனைகள் நிறைந்ததுதான் வாழ்க்கை. பிரச்சனைகளை மட்டுமே நீ கண்டுவந்தால் மகிழ்வான வாழ்க்கையை காணமுடியாது. பிரச்சனைகளை தள்ளிவைத்து மாற்று வழியில் தீர்வுகாண முயற்சித்தால் மகிழ்வான வாழ்க்கையை நீ காணமுடியும் என்ற விளக்கத்தையும் அளித்தார்.

## இந்தியாவைத் தெரிந்துகொள்ளுங்கள்

1.இந்தியாவைப்போல அகஸ்ட் 15ந் தேதி சுதந்திரதினம் கொண்டாடும் நாடு எது ?

2.இந்தியாவின் முதல் மருத்துவமேதையின் பெயர் என்ன ?

3.இந்தியாவில் மதுவிலக்கை அமுல்படுத்திய முதல் முதலமைச்சர் யார் ?

4.இந்திய பசுமைப்புரட்சி விஞ்ஞானி எனப்படுபவர் யார் ?

5.இந்தியா முதன்முதலாகத் தயாரித்த முதல் போர்க்கப்பலின் பெயர் என்ன ?

6.இந்தியா எந்தத்துறையில் முதல் முதலாக நோபல் பரிசு பெற்றது ?

7.இந்திய ஷேக்ஸ்பியர் எனப்படுபவர் யார் ?

8.இந்திய தேசியகீதமான ஜனகனமனபாடலை எத்தனை விநாடிகளுக்குள் பாடி முடிக்க வேண்டும் ?

9.இந்தியாவின் முதல் அணுசக்தி நீர்மூழ்கி கப்பலின் பெயர் என்ன ?

10.இந்தியாவில் மதுவிலக்கு சட்டத்தினால் ஏற்படும் இழப்பை சரிசெய்ய எந்த வரி அறிமுகப் படுத்தப்பட்டது ?

11.இந்தியாவின் முதல் தபால் அலுவலகம் திறக்கப்பட்ட நகரம் எது ?

12.இந்தியாவின் நுழைவு வாயில் என அழைக்கப்பட்ட நகரம் எது ?

13.இந்தியாவில் ஆங்கில கல்வி முறையை அறிமுகப்படுத்தியவர் யார் ?

14.இந்தியாவில் அதிகம் கிடைக்கும் தாது என்ன ?

15.இந்தியாவின் முதல் தனியார் ரேடியோ எஃப் எம் அலை வரிசை நிலையத்தின் பெயர் என்ன ?

16.இந்தியாவின் முதல் பெண்மணி யார் ?

17.இந்தியாவின் முதல் பெண் ஐ.பி.எஸ் அதிகாரி யார் ?

## முதல் நோபல் பரிசு



முதல் முதலாக சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவர் ஹென்றி டுனாண்ட். ரெட்கிராஸ் அமைப்பைத்தொடங்கி, போர்மூளும் நாடுகளுக்கு இடையே சமாதானம் ஏற்பட பாடுபட்டதற்காகவும், போர்க்களத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சேவை செய்ததற்காகவும் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.1901ம் ஆண்டு வழங்கப்பட்ட முதல் நோபல் பரிசை இவர் பெற்றார்.

எண்ணமே முன்னேற்றத்தின் ஆணிவேர். எண்ணம் காந்த சக்திகொண்டது. வசீகரிக்கும் தன்மை பெற்றது. ஆகவே நமது எண்ணங்கள் அதன் விளைவுகளைப் புறச்சூழ்நிலையில் உருவாக்கும் .எங்கே போக ஆசைப்படுகிறோமோ,அங்கே போக வழி பிறக்கும் பாதை அமையும்.வாழ்க்கை என்பது ,உள்ளிருந்து வெளியே போகும் ஒரு செயல் என்கிறார்கள் நாம் அச்செயலைப்புரிந்துகொள்ளவேண்டும்.விதை எப்படி தண்ணீர் பட்டவுடன் பூரித்து முளைவிடுகிறதோ ,அதேபோல எண்ணங்கள் ,மனத்திலேயே வளம்பெற்று வெடிக்க வேண்டும்.வெளிவரவேண்டும்.அதற்கு நாம் உள்ளத்தைப் பயன்படுத்தவேண்டும்.

எண்ணங்கள் பல்வேறாக பரவி இருப்பினும் குறிக்கோள் எனும்போது நமது எண்ணங்கள் ஒரு கொள்கையைச் சுற்றி,ஓர் ஆசையைச்சுற்றி பின்னப் படுகின்றன. எண்ணங்களை பரவவிடாமல் ஒருமுனைப் படுத்துதல் அவசியம்.ஊருக்குச் செல்லும் போது ரயில்வே நிலையத்திற்குச் சென்று ஐயா ஒரு டிக்கெட் கொடுங்கள் என்று கேட்பதில்லை.இன்ன ஊருக்குப் போகிறோம் என்ற திட்டம் நம்மிடம் இருக்கிறது.ஆனால் நம்மில் பலர் இன்றும் எவ்விதக் குறிக்கோளும் இன்றி வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்கிறோம்.

நாம் நம் மனத்திற்கு ஒரு திட்டத்தை,ஒரு தெளிவை ,ஒரு குறிக்கோளைக் கொடுக்கவேண்டும்.மனம் ஒரு அசாதாரண இயக்கம்.நாம் அதனிடம் ஒரு தெளிவான குறிக்கோளைக் கொடுத்துவிட்டோமானால் ,மனதிற்கு உத்தரவு போட்டுவிட்டோமானால் நிச்சயம் அது நம்மைஅந்த ஊருக்கு அழைத்துச்செல்லும்.மனம் என்றும் பொய்ப்பதில்லை. எண்ணங்கள் நெறிப்படுத்தப்படும்போது ,ஒழுங்கு படுத்தப்படும்போது அது குறிக்கோளாகிறது. லட்சியமாகிறது. வாழ்க்கையை நாம் எண்ணுகிறபடி நாம் அமைக்கமுடியும்.அதற்கு வேண்டிய மன உறுதியிருந்தால். திட்டங்கள் இருந்தால்.

வள்ளுவர் கூறுகிறார். விதியைப் புறமுதுகிடச் செய்யலாம். ஒரு குறிக்கோளை நோக்கி ஓயாது உழைத்தால் என்று. வாழ்க்கையில் நம்பிக்கை இல்லாதவர்களுக்குக் குறிக்கோள் ஏதும் இருப்பதில்லை. குறிக்கோள் என்பது வெறும் ஆசையல்ல. ஆசைக்கு மேல் அதிகம். நமக்கு அதில் ஈடுபாடு இருக்கவேண்டும். குறிக்கோளை நாம் உடலால் உணரவேண்டும். ரசிக்கவேண்டும். நுகரவேண்டும். நாம் அத்துடன் வாழவேண்டும். விவேகானந்தர் கூறினார்நீருக்குள் அமுங்கியிருப்பவன் வெளியே வர எப்படித் துடிக்கிறானோ அத்தகைய ஜீவ வேகம் நமக்கு வேண்டுமென்று. அத்தகைய துடிப்பு, குறிக்கோளை அடையும்போது, எண்ணங்கள் சித்தியாக, சாதனைகளாக மலர்கின்றன.

**நூலைப்படி** – பாவேந்தர் பாரதிதாசன்



நூலைப்படிசங்கத்தமிழ்
நூலைப்படிமுறைப்படி
நூலைப்படி
காலையிற்படி கடும்பகல் படி
மாலை,இரவு பொருள்படும் படி
சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக் கெல்லாம் தள்ளுபடி
சேதி அப்படி தெரிந்தபடி
தீமை வந்திடுமே மறுபடி (நூலைப்படி)
பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி(நூலைப்படி)
தொடங்கையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி
அடங்கா இன்பம் மறுபடி
ஆகும் என்ற ஆன்றோர் சொற்படி நூலைப்படி.

## கோவில் உச்சியில் ஆங்கிலேயர்? ஓர்புரியா புதிர்!



தஞ்சை பெரியகோவில் ஒரு பக்கத்தில் ஆங்கிலேயர் ஒருவர் தலையில் தொப்பி அணிந்தவாறு உள்ள சிற்பம் காணப்படுகிறது. பிற்காலங்களில்பிரிட்டிஷ்சார் இந்தியாவை ஆளப்போகிறார்கள் என்பதனை முன்னமேயே கணித்திருப்பதாகக்கருதப்படுகிறது என்றாலும் அச்சிற்பம் பெரியகோவில் உச்சியில் இருப்பதற்கான காரணம் நமக்குத் தெரியவில்லை.

## இந்தியாவைத் தெரிந்துகொள்ளுங்கள் விடைகள்

| | | |
|---|---|---|
| 1. கென்யா | 2. சரகா (கி.மு 1000ஆண்டு) | 3. ராஜாஜி |
| 4. எம்.எஸ்.சுவாமிநாதன் | 5. ஐ.என்.எஸ். ஆதித்யா | 6. இலக்கியம்(ரவீந்திரநாத் தாகூர் பெற்றார்) |
| 7. காளிதாசர் | 8. 52 வினாடிகளுக்குள் | 9. ஐ.என்.எஸ்.சக்ரா |
| 10. விற்பனை வரி | 11. சென்னை | 12. மும்பை |
| 13. பெண்டிங் பிரபு | 14. நிலக்கரி | 15. ரேடியோ சிட்டி |
| 16. குடியரசுத் தலைவரின் மனைவி | | 17. கிரண்பேடி (1972) |

## ஜோக்ஸ்



1. தலைவரே,உங்களுக்குக் கொடுத்த டாக்டர் பட்டத்தை வீட்டு வாசல்ல உள்ள போர்டில போடாதீங்கன்னு சொன்னேனே, கேட்டீங்களா ? என்னாச்சு ?
அந்தப் போர்டைப் பார்த்துட்டு ,வர்ர நோயாளிங்க கூட்டத்தைச் சமாளிக்க முடியலை !
2. அம்பயர் ஏன் அந்த பவுலரை அடிக்கிறாரு ?
பின்னே என்ன ? பந்துல கொஞ்சம் எச்சில் துப்பிக் கொடுங்கன்னு பவுலர் கேட்டா, எந்த அம்பயருக்குத்தான் கோபம் வராது ?
3. டேய் ! நம்மளை விட வயசுல பெரியவங்கக்கிட்டே பவ்யமா நடந்துக்கணும் ! புரியுதா ?
ஏம்பா ! அப்ப அம்மா உங்களைவிட வயசுல பெரியவங்களா ?
4 .உங்க ஜோடிப்பொருத்தம் பிரமாதமா இருக்கு ! ஆமாம்,மாப்பிள்ளை என்ன பண்றாரு ?
செருப்புக்கடை வச்சிருக்காரு !.

## இவர்கள் சொன்னார்கள்

பெண் பிறவியின் நோக்கம் தாய்மைத்தொண்டு இவ்வுலக ஆக்கமும் அழிவும் அவளிடந்தான் இருக்கின்றன.பெண்ணின் தாய்மைத் தொண்டு எத்தகையது ?உலக நலத்துக்கே உரியதன்றோ.இதைவிட உலகில் வேறு பெருமையுண்டோ ? – திரு.வி.க

வீண் அரட்டைக்கு நேரம் கேட்கும் நண்பர்களை அனுமதிக்காதீர்கள். எதிர்மறை எண்ணத்தை ப் பரப்பிவிடுபவர்களை அருகே அனுமதிக்காதீர்கள்.உங்கள் கனவுகளை கேலி செய்பவர்களை உங்கள் பக்கம் வரவிடாதீர்கள். உங்கள் நேரத்தை வீணடிக்கும் எதையுமே ஏற்காதீர்கள்.உறவுகளில் வலியுண்டு,வேதனைகள் உண்டு,கீறல்கள் உண்டு,சத்தம் உண்டு. ஆனாலும் உறவுகளில் கிடைக்கும் பாதுகாப்பு வேறு எதிலும் இவ்வுலகில் கிடைப்பதில்லை. – சுகிசிவம்

செயலை விதையுங்கள் ,பழக்கங்கள் உருவாகும்.பழக்கத்தை விதையுங்கள்.குணம் உண்டாகும். குணத்தை விதையுங்கள் ,உங்கள் எதிர்காலம் உருவாகும். – போர்டு ஏமன்

மிக விரைவில் பறந்துசெல்லும் நேரத்தைப்பிடி.அது உன்னை விட்டுச் செல்லும்போதே அதை பயன்தரும் வகையில் உபயோகப்படுத்து வாழ்க்கை மிகவும் குறுகிய வசந்த காலம்.மனிதன் அதில் மலர்ந்த மலர்.எனவே நேரத்தை நன்றாகப் பயன்படுத்து. – ஜான்சன்

## கணிதப்புதிர் விடைகள்:

XI இதை

1) X என்று திருப்பிப்போட்டுப்பாருங்கள்.

2) $\frac{X}{I}$ என்று மேலும் கீழுமாகப் போட்டுப்பாருங்கள்.

3) X/I என்று கோட்டினை சாய்வாகப் போட்டுப்பாருங்கள்.

## விடுகதை விடைகள்

1.கரும்பு 2.கோலம் 3.தொலைக்காட்சிப்பெட்டி 4.குடை 5.தேங்காய் 6.நகம்
7.காலண்டர் 8.காகம் 9.உப்பு 110.தபால்பெட்டி 11.முகம்பார்க்கும் கண்ணாடி
12.மாட்டுக்கொம்பு

# அடம் பிடிக்கும் குழந்தைகளைச் சமாளிப்பது எப்படி?

எல்லா பெற்றோர்களுக்கும் இருக்கும் கவலை குழந்தையின் பிடிவாத குணத்தை எப்படியாவது போக்கிவிட வேண்டும் என்பதுதான். தூங்குவதில் தொடங்கி சாப்பிடுவதற்கும், குளிப்பதற்கும், எழுப்புவதற்கும் என ஒவ்வொரு செயலும் பெற்றோருக்குச் சவாலான விஷயம். எவ்வளவு தான் பொறுமையாக சொன்னாலும் சில குழந்தைகள், ''தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்'' என்பது போல பிடிவாதமாக இருப்பார்கள். இதுபோன்ற சமயங்களில் சமாளிப்பது சவாலின் உச்சமாக இருக்கும். அதிலும் வெளியில் வந்திருக்கும் போது, ''இது தான் வேண்டும்'' என அடம்பிடித்து கீழே விழுந்து உருளும் குழந்தைகளைப் பார்க்கலாம். இப்படி அடம் பிடிக்கும் குழந்தைகளை எப்படித்தான் மாற்றுவது என்பதைப் பற்றி உளவியலாளர்கள் சொல்வது என்ன என்பதை பார்க்கலாமா?

''ஒன்று சொன்னால் ஆச்சர்யப்படுவீர்கள். பொதுவாக, குழந்தைகளிடம் அடம்பிடிக்கும் பழக்கம் மூன்றாவது மாதத்திலேயே ஆரம்பித்துவிடுகிறது. அம்மா நம்மைத் தூக்கியே வைத்திருக்க வேண்டும் என அழுது அடம் பிடிப்பார்கள். கொஞ்சம் பெரியவர்கள் ஆனதும், சாப்பிடுவது முதல் பொம்மை கேட்பது வரை பட்டியல் நீளும்.

அடம் பிடிக்கும் பழக்கம் எந்த வழியில் வந்தாலும், குடும்பத்தினர் ஒன்றிணைந்து தொடர் முயற்சி செய்தால் சரி செய்யலாம். குழந்தைகள் எல்லோருமே சூழல் புரியாமல் அடம் பிடிப்பது இல்லை. இவர்கள் ஒரு வகையில் புத்திசாலிக் குழந்தைகள் எனச் சொல்லலாம். தங்கள் மனதில் உள்ள விஷயத்தைச் செய்வதற்கு அவர்கள் எடுத்துள்ள ஆயுதமே அடம்பிடித்தல்.

ஏதாவது ஒரு விஷயத்தைச் செய்ய வலியுறுத்தி அடம் பிடிப்பார்கள். ''உடனே கடைக்கு கூட்டிட்டுப் போகவேண்டும், டிவி, செல்போன் விளையாட வேண்டும்'' என எதுவாகவும் இருக்கலாம். நினைத்தது நிறைவேறவில்லையென்றால் புரண்டு அழுதல், பொருளைப் போட்டு உடைத்தல் எனச் செய்வார்கள். இத்தகைய செயல்களில் குழந்தைகள் ஈடுபடும்போது, பெற்றோர்களும் சம்மதித்துவிடுவார்கள். அல்லது, அதற்கு மாற்றாக வேறு ஏதாவது செய்கிறேன் என வாக்குறுதி அளித்து சமாளிப்பார்கள். எடுத்துக்காட்டாக, பொம்மை வேண்டும் என அடம் பிடித்தால், உடனே வாங்கித் தரக்கூடாது. நாளை வாங்கித் தருகிறேன் என சமாளிக்கவும் கூடாது. எப்போது முடியும் அல்லது ஏன் முடியாது என்பதைத் தெளிவாக, திட்டவட்டமாகக் கூறவேண்டும். அடம் பிடித்துக் கீழே உருண்டாலும் கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் வீட்டில் இருக்கும் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி என எல்லோரும் ஒருமித்த கருத்தில் இருக்க வேண்டும். ஒருவர் கண்டிக்கும் போது, மற்றொருவர் சப்போர்ட் செய்யக் கூடாது. இதனால், யாரிடம் கேட்டால் நடக்கும், கிடைக்கும் என்பதைத் தெரிந்துகொண்டு, நினைக்கும் காரியத்தை சாதிக்க நினைப்பார்கள்.

சில குழந்தைகள் வீட்டில் நினைத்ததைச் சாதிக்க முடியாது என்பதற்காக, வெளியில் செல்லும்போது, பொது இடங்களிலும் அடம் பிடிப்பார்கள். மற்றவர்கள் நம்மைப் பார்ப்பதை தவிர்க்க, பெற்றோர்கள் வாங்கிக் கொடுத்து விடுவார்கள், எனக் குழந்தைகள் நினைக்கும். இத்தகைய குழந்தைகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, பொது இடம் எனப் பதறாமல், கோபத்தைக் காட்டாமல் கண்டுகொள்ளாமல் இருக்கும் நடைமுறையை இங்கும் பயன்படுத்த வேண்டும். நாளடைவில் குழந்தைகள் திருந்திவிட வாய்ப்பு உண்டு.

முக்கியமான விஷயம். இதுபோன்ற நடைமுறைகளைப்பின்பற்றும்போது உடனே இதற்கான பலன் கிடைக்காது. கொஞ்சம் கொஞ்சமாகத் தான் ரிசல்ட் தெரியவரும். முயற்சியை விட்டுவிடாமல் தொடரவேண்டும். முடிந்தவரை இரண்டு அல்லது மூன்று வயதிலேயே குழந்தைகளின் அடம் பிடிக்கும் போக்கை நீக்க வேண்டும். இல்லாவிட்டால், பள்ளிக்குப் போகமாட்டேன் என்பதில் ஆரம்பித்து சைக்கிள், பைக் வரை சென்று நிற்பார்கள். தற்போதைய சூழலில் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளே பெற்றுக் கொள்கின்றனர். பெற்றோர்களும் வேலைக்குச் செல்வதால், குழந்தைகளின் சின்ன அழுகையையும் தாங்கமுடியாமல் கேட்பதை வாங்கிக் கொடுக்கும் மனநிலைக்குச் சென்றுவிடுகின்றனர். இத்தகைய குழந்தைகள், எதிர்காலத்தில் சின்ன ஏமாற்றத்தையும் தாங்கிக் கொள்ள இயலாமல், சமூகத்தை எதிர்கொள்வதில் பல சிக்கல்களைச் சந்திக்கிறார்கள் என்பதைப் பெற்றோர்கள் உணரவேண்டும். சிறு வயதிலேயே குழந்தைகளின் பிடிவாதத்தைக் கட்டுப்படுத்த முயற்சி எடுக்கவேண்டும். இதையெல்லாம் தொடரும் போது உங்கள் பிள்ளைகள் அடம்பிடிக்கும் பழக்கத்திலிருந்து விடுபடுவதை உணர்வீர்கள்.

– அர்ச்சனா சுவேதாரண்யம்
பெசன்ட் நகர், சென்னை – 90.
9943702054

## சங்கப்பலகை

**பங்கு பெறுவோர் : சித்ரா, கோமதி, கௌரி, பிரியா, மீரா, ஆண்டாள், தீபிகா, வசுமதி, மீனா.**

**இடம் : அறிஞர் அண்ணா சமாதி.**

மகளிர் அனைவரும் மாலை 5 மணி அளவில் சமாதியில் குழுமினர்.

சித்ரா : செப்டம்பர் 15–ஆம் தேதி அண்ணாவின் பிறந்த நாள் வருகிறது. இம்மாதம் இங்கு கூடுவது மிகவும் பொருத்தமாக உள்ளதல்லவா ?

ஆண்டாள் : ஆமாம். உண்மைதான். அந்த காலத்தில் கல்லூரியில் படிக்கும் போது, அவரின் பேச்சினைக் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. மிகவும் அருமையாக பேசுவார். மாணவர்கள் அவ்வளவு அமைதியாக அவரது பேச்சைக் கேட்பது வழக்கம்.

மீரா : ஒரு முறை மாநிலக்கல்லூரி விழாவிற்கு வந்திருந்த அவர் ஆங்கிலத்தில் அழகாக உரையாற்றி முடிக்கவும், மாணவர்கள் தமிழிலும் பேசுமாறு வேண்டுகோள் விடுக்க, அடுத்து ஒரு அரைமணி நேரத்திற்கும் மேலாக தமிழிலும் பேசி அசத்தினார்.

கோமதி :எனக்கு அவருக்கு மிகவும் பிடித்த வாக்கியமான ‘எதையும் தாங்கும் இதயம் வேண்டும்’ என்பது நினைவுக்கு வருகிறது.

பிரியா : அவரது கல்லறையிலும் ‘எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது’ என்று பொறிக்கப்பட்டுள்ளதே!

வசுமதி : ஆண்டாளக்கா ! புரட்டாசி மாத வழிபாடு குறித்து கூறுங்களேன்.

ஆண்டாள் : செப்டம்பர் 21–ஆம் தேதி காலை 11 மணியிலிருந்து 12 மணி வரை கொலு வைக்க உகந்த நேரம். செப்டம்பர் 22–ஆம் தேதியிலிருந்து நவராத்திரி ஆரம்பம். முன்னோர்களை மஹாளய அமாவாசை அன்று வழிபடுவது மிகவும் சிறந்ததாகும்.

மீரா : புரட்டாசி மாதம் பெருமாளுக்குரியது. திருப்பதியில் பிரம்மோற்சவம் செப்டம்பர் மாதம் 24–ஆம் தேதி முதல் தொடங்குகிறது. புரட்டாசி சனிக்கிழமைகளில் வீடுகளில் தளிகை போடுவது நம் கார்குலத்தில் மிக முக்கியமானதாகும்.

சித்ரா : சிலர் தங்கள் வீடுகளில் கொலு வைத்து, மற்றவர்களை வெற்றிலை பாக்கு வாங்குவதற்கு அழைப்பது வழக்கம். அது மகளிரிடையே கூடிக் களிக்க ஒரு வாய்ப்பு. மேலும் அவர்களிடம் உள்ள பட்டுப்புடவைகளும், புதுப்புடவைகளும் அலமாரியை விடுத்து வெளியே வர ஒரு சந்தர்ப்பம்.

மீனா : மகளிர் கூடிக் களிக்க என்றதும், எனக்கு குடந்தையில் நடந்த கார்குலச் சங்கமம் நினைவுக்கு வருகிறது. நல்ல கூட்டம். வந்திருந்த அனைத்து மகளிருக்கும் நினைவுப் பரிசு வழங்கியதுடன், குழந்தைகளுக்கு போட்டிகள் நடத்தி பரிசுகளும், பதக்கங்களும் வழங்கி சிறப்பித்தனர்.

தீபிகா : மீனா ! நீ போயிருந்தியா ? எனக்கு கும்பகோணம் சித்தி, விழாவிற்குச் சென்று வந்த பின் தொலைபேசியில் கூறினார்கள். குழந்தைகள் அனைவருக்கும் பரிசு கொடுக்கப்பட்டதாகவும், அவர்கள் மிகவும் மகிழ்ந்தார்கள் என்றும் கூறினார்கள். மேலும் நிறைய மகளிர் கடைகள் வைத்து, அவர்களின் பொருட்களை விற்பனை செய்தார்கள் என்றும் கூறினார்.

மீனா : மகளிரின் கார்குலத் திருநாள் கொண்டாட்டத்தின் முதல் முயற்சி வெற்றிகரமாக நடந்தேறியது என்பதில் வேற்றுக் கருத்துக்கள் இல்லை.

பிரியா : இந்த வருடம் இயற்கையின் சீற்றம் அதிகமாகவே உள்ளது. வடமாநிலங்களில் மேக வெடிப்பின் காரணமாக கனமழையும், வெள்ளமும், நிலச்சரிவும் பலத்த சேதத்தினை ஏற்படுத்தி உள்ளது. ஜம்மு காஷ்மீரில், ஜம்மு – பதான்கோட் தேசிய நெடுஞ்சாலையில் லோகேட்மோர் பகுதியில் பாலம் கனமழையினால் சேதம் அடைந்ததால் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது.

கௌரி : உத்தரகாண்ட் சமோலி மாவட்டத்திலுள்ள தாராலியில் மேக வெடிப்பு காரணமாக கடைகள், வீடுகள், வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டன. அதன் இடிபாடுகள் பல கி.மீ. தூரத்துக்கு பரவி உள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

வசுமதி : மும்பையில் மூன்று நாட்கள் கன மழை பெய்யுமென வானிலை மையம் ரெட் அலார்ட் கொடுத்திருக்க, ஆனால் கன மழை 5 நாட்கள் தொடர, கல்லூரி, பள்ளிகள் விடுமுறை விடப்பட்டுள்ளன. ரயில் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. வெள்ளத்தில் தவித்த சுமார் 200 நபர்கள் படகுகள் மூலம் மீட்கப்பட்டுள்ளனர். 250 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இம் மழையில் உயிர் பலியும் இருப்பது தான் சோகம்.

கோமதி :: இயற்கைச் சீற்றமான பூகம்பம் குறித்து பார்ப்போம். ரஷ்யாவின் கிழக்குப் பகுதியான கம்சட்கா தீபகற்பத்தை ஒட்டியுள்ள குரில் தீவுகள் அருகே ரிக்டார் அளவில் 7 புள்ளியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஆகஸ்ட் முதல் வாரத்தில் ஏற்பட்டது. அதன் தாக்கம் காரணமாக 600 ஆண்டுகளாக தூங்கிக் கொண்டிருந்த கிராஷென்னினி கோவ்

எரிமலை வெடித்து தீக்குழம்பினைக் கக்கியது. சமீபத்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நில நடுக்கத்தால் இது நிகழ்ந்திருக்கலாமென அந்நாட்டு விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

தீபிகா : கேரளா, மகாராஷ்டிராவின் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் இரண்டு புதிய பூரான் இனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு பாலிடிரெமானம் க்ஸிபோஸம், பாலிடிரெபானம் ஸ்பினாட்டம் என பெயர் சூட்டப்பட்டுள்ளதாம்.

சித்ரா : இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனம் 2024–ஆம் ஆண்டில் 683 புதிய விலங்கினங்களையும், துணை இனங்களையும் கண்டறிந்து ஆவணப்படுத்தியுள்ளது. இதில் 101 புதிய கண்டுபிடிப்புகள் கேரளாவில் கிடைத்துள்ளன. 80 விலங்கினங்கள் முற்றிலும் புதியவை. மீதி 21 உயிரினங்கள் முதன் முறையாக இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ளன. மேற்கு தொடர்ச்சி மலை உலகின் எட்டு முக்கிய பல்லுயிர் மையங்களில் ஒன்றாகும்.

பிரியா : விலங்குகளைப் பற்றி நானும் படிச்சதைக் சொல்றேன்பா! ஷார்க் பே பேண்டிகூட் என்பது எலி போன்ற ஒரு சிறிய விலங்கு ஆகும். அது 150 ஆண்டுகளுக்கு முன்பே அழிந்துவிட்டதாக கூறப்பட்டது. ஆஸ்திரேலிய வனவிலங்கு பாதுகாப்பு அமைப்பு சார்பில் வைக்கப்பட்டிருந்த கேமராவில் இந்த விலங்கு குடும்பத்துடன் நடந்து செல்வது பதிவாகி உள்ளது.

கௌரி : நானும் விலங்கு சம்பந்தமாக ஒண்ணு சொல்றேன். அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் சிலந்தி, பாம்பு, தேள் ஆகியவற்றின் விஷத்தை செயற்கை நுண்ணறிவு கொண்டு ஆராய்ந்ததில், அவற்றில் பாக்டீரியாக்களைக் கொல்லக் கூடிய 386 சேர்மங்கள் இருப்பதைக் கண்டு பிடித்துள்ளனர்.

ஆண்டாள் : என்னைப் பொருத்தவரைக்கும் ஒரு நல்ல செய்தி! ஆன்லைன் விளையாட்டு தடை மசோதா. எத்தனை பேர் ஆன்லைன் விளையாட்டில் பணத்தை இழந்து, தற்கொலை செய்து கொள்கின்றனர். இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால் பொது மக்களுக்கு நன்மை பயக்கும் இல்லையா?

மீனா : எது எப்படியோ? நமது பாரதம் பளுதூக்குதல், துப்பாக்கி சுடுதல், வில்வித்தை, செஸ், பாட்மிண்டன், கிரிக்கெட், ஹாக்கி, தடகளம், மல்யுத்தம், நீச்சல், கபடி போன்ற பிரிவுகளில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது மகிழ்ச்சியை அளிக்கிறது.

வசுமதி : ஆமாம்க்கா! டாப்ஸ்யா 20 வயதுக்குட்பட்டோர் பிரிவில் உலக மல்யுத்த பிரீஸ்டைல் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

சித்ரா : ஜுனியர் பெண்களுக்கான ஸ்கீட் பிரிவு இறுதிச்சுற்றில் மான்சி ரகுவன்ஷி தங்கம் வெல்ல, யாஷஸ்வி ரத்தோர் வெள்ளி வென்றுள்ளார்.

மீனா : ஆசிய துப்பாக்கி சுடுதலில் அபிநவ் ஷா முதலிடம் பிடித்து (250.4 புள்ளிகள்) தங்கம் வென்றுள்ளார்.

தீபிகா : இஸ்ரேலில் நடந்த ஜெருசலேம் கிராண்ட் ஸ்லாம் தடகளப் போட்டியில் 2000 மீ ஸ்டீபிள்சேஸ்: ஓட்டத்தில் இலக்கை 6 நிமிடம் 13.92 விநாடி நேரத்தில் கடந்து புதிய சாதனைப் படைத்துள்ளார் இந்திய வீராங்கனை அங்கிதா தியானி.

சித்ரா : உலக வில்வித்தையில் 16 வயதுக்குட்பட்டவருக்கான தங்கப் பதக்கத்தை ஷர்வாரியும், 21 வயதுக்குட்பட்ட யூத் உலக சாம்பியன் ஷிப் பிரிவில் சிகிதா தங்கம் கைப்பற்றினார். இன்னும், இன்னும் நிறைய வெற்றிகளைப் பெற வாழ்த்துவோம்!

அடுத்த மாதம் செம்மொழிப் பூங்காவில் சந்திக்கலாமென முடிவு செய்து, சுண்டல் வாங்கிச் சுவைத்த பின் தோழிகள் மறக்காமல் அண்ணா சமாதியை வணங்கி கலைந்தனர்.

நன்றி ! வணக்கம் !!

## வாழ்த்துகிறோம்

JRD டாட்டா நிறுவனத்தால் ஆண்டுதோறும் சிறப்பித்து வழங்கப்படும் சிறந்த தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் **ஆலோசகருக்கான விருது** மற்றும் **பரிசு** 29.07.2025 அன்று புதுடில்லியில் India Habi tata Center-ல் நடைபெற்ற சீர்மிகு விழாவில் "சென்னை கோட்டூர்புரத்தில் வசிக்கும்" தளவாய் தெய்வத்திரு. ந. இராமசாமி பிள்ளை குமாரர் திரு. **R. குஞ்சிதபாதம்,** BE., MBA முன்னாள் பொது மேலாளர் BHEL அவர்களுக்கு மாண்புமிகு, மத்திய அமைச்சர் **ஜோதிராத்திய சிந்தியாவால்** வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. அன்னாருக்கு எங்கள் வாழ்த்துகள்.

– அன்பன்
த. இராதகிருஷ்ணன் பிள்ளை குடும்பத்தினர்,
வேள்வி மங்கலம்.

## ஸ்ரீ பக்த புரந்தரதாஸர்

பகுதி – 2

–வனஜா இளங்கோவன்

ஸ்ரீ ரகுநாதரின் வட்டிக் கடை, தர்மத்தின் கோயில் ஆனது. ஏழைகளின் கண்ணீர் கதை படித்த கடை கண்ணனின் புகழ்பாடும் பஜனைக் கூடமானது. ஸ்ரீரகுநாதர் திருக்கோயில் திருப்பணிகளுக்கும், ஏழைகளுக்கும் செல்வத்தை வாரி வழங்கினார். கோவில்களில் திருக்குளங்களை வெட்டியும், வேத பாடசாலைகளை நிறுவியும், தங்கும் விடுதிகள் பலவற்றை அமைத்தும் தொண்டுபுரிந்தார். ஆங்காங்கே சத்சங்கங்களை நிறுவி பகவத் விஷயங்களைப் பரப்ப முயற்சி எடுத்தார். மேலும் உபந்நியாசங்கள் நடைபெற பெரும் சபா மண்டபங்களைக் கட்டினார். பண்டரிபுரத்தில் நாதபிரம்ம மடம் ஒன்றை ஸ்தாபித்து, அனுதினமும் நாமசங்கீர்த்தனங்களும், பிரவசனங்களும் நடந்துகொண்டே இருக்க ஏற்பாடுகளைச் செய்தார்.

வட்டிப் பணத்தை எண்ணிய விரல்கள், துளசி மணி மாலையை உருட்டின. பணம், பணம் என்று பறந்தவர் தினம், தினம் நாராயணனின் நாமத்தையே பேச்சாகவும், மூச்சாகவும் கொண்டார். இளமையிலேயே சங்கீத ஞானம் பெற்றிருந்த ஸ்ரீ ரகுநாதர், இப்போது சங்கீத மேதையாகி, இசை எனும் இன்ப வெள்ளத்தில் மூழ்கி தன்னை மறந்தார். அவரின் அருமை மகள் ருக்மணி, திருமண வயது அடைந்து விட்டது குறித்து கவலையே இன்றி, விட்டலன் பார்த்துக்கொள்வான் என இருந்தார். அப்படி இருந்த காலத்தில் ஒருநாள் பஜனை செய்து கொண்டிருந்த ரகுநாதர் முன்பு, பகவான் அந்தணராக எதிரில் வந்து, கிஷ்கிந்தாபுரியில் எனது நண்பனின் மகன் திருமணத்துக்கு தயாராக இருப்பதாகவும், ருக்மணிக்கு மிகவும் பொருத்தமானவனெனக் கூறி சம்பந்தம் பேசி முடிக்கிறேன் எனக் கூறி மறைந்தார்.

மறைந்த எம்பெருமான், கிஷ்கிந்தாபுரியை அடைந்து, கேசவராவ் என்ற செல்வந்தரைக் கண்டு, பண்டரிபுரத்திலிருந்து தங்கள் குமாரனுக்குப் பெண் பேச வந்துள்ளோம் என்றும் வேமன்னபுரியில் ஸ்ரீ ரகுநாதர் எனும் பக்தனின் பெண் ருக்மணி மிகவும் பொருத்தமாக இருப்பாள் என்றார். கேசவராவ் இப்போதே வேமன்னபுரி சென்று, ஸ்ரீ ரகுநாதரைக் கண்டு பேசுவோம் என்று கூற, இறைவன், அதற்கு அவசியமில்லை; அவள் எனக்கு சுவீகார புத்திரி மாதிரி என்றார். அதனால் அன்றே கேசவனும், கேசவராவும் தாம்பூலம் மாற்றிக்கொண்டனர். பகவான் வேதபிராம்மணர்களுக்கு நிறைய பொன்னைத் தானமாக அளித்தார். பின் அவர் ஸ்ரீ ரகுநாதரிடம், அடுத்த முகூர்த்தத்தில் உன் பெண்ணுக்கும், கிஷ்கிந்தாபுரியின் கேசவராவ் மகனுக்கும் திருமணம். இப்போதே ருக்மணியுடன் புறப்படுவோம் என்று கூறி திருமண ஏற்பாட்டைக் கவனிக்க பகவான் சென்றுவிட்டார். ஸ்ரீ ரகுநாதர், அவரது மனைவி லட்சுமி, மகள் ருக்மணி மற்றும் உற்றார், உறவினருடன் வழிநெடுக பஜனை செய்த வண்ணம் கிஷ்கிந்தாபுரி அடைந்தார். எம்பெருமானின் திருவருளால் அவ்வூர் வைகுண்டம் போல் காட்சி அளித்தது. வெகு விமரிசையாக திருமணம் முடிந்து, பெண் வீட்டார் வேமன்னபுரி திரும்பினர். ஸ்ரீ ரகுநாதரும், லட்சுமியும் புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்து வர புறப்பட்டனர். பத்ரிநாத், மதுரா, கோகுலம், பிருந்தாவனம், வாரணாசி போன்ற புண்ணியத்தலங்களைத் தரிசித்து திருப்பதியை வந்தடைந்தனர்.

திருப்பதியில் கோயில் கொண்டிருக்கும் பாலாஜியை தங்கள் இசையால் அலங்காரம் செய்ததுடன், அத்திருத்தலத்திலேயே சில காலம் வசிக்க எண்ணினார். அதேபோன்று திருப்பதியில் தங்கி வேங்கடமுடையானைத் தினமும் சேவித்து வந்த பக்தை தாசி குலத்தில் பிறந்த புரந்தரி என்பவள், பகவானை தன் ஆடலாலும், வீணா கானத்தாலும், பாடலாலும் போற்றி வழிபடும் பக்தை அவள். புரந்தரி தினந்தோறும் நடுநிசியில் காலில் சதங்கை கொஞ்ச, கையில் வீணையுடன் கோயிலுக்குள் செல்வாள். வீணை மீட்டி காப்பிட்ட கதவுகளைத் திறக்க செய்வாள்.

கதவு திறந்ததும் எம்பெருமான் நேரில் எழுந்தருளி, புரந்தரியின் வீணை இசைக்கு ஏற்ப நடனம் ஆடுவார். பிறகு பகவான் வீணை இசைப்பார்; புரந்தரி நடனமாடுவாள். இந்த குதூகல அனுபவம் அனுதினமும் நடந்தவண்ணம் இருந்தது. ஒருநாள் புரந்தரி தனது இல்லத்தின் வழியே ஸ்ரீ ரகுநாதரும், லட்சுமிபாயும் பாடிக்கொண்டு வருவதைக் கண்டு உலகையே மறந்தாள். விரைந்து சென்று அவர்களை வலம் வந்து நமஸ்கரித்து, “சுவாமி! நீங்கள் இவ்வூருக்குப் புதியவர்கள் என எண்ணுகிறேன். அதனால் நீங்கள் இந்த எளியவள் இல்லத்தில் தங்கவேணுமாய் கேட்டுக்கொள்கிறேன், வாருங்கள்” என அழைத்தாள். மறுக்காமல் தம்பதிகள் புரந்தரியின் இல்லத்தில் தங்கி, பகவத் கைங்கர்யத்தை நடத்தி வரலாயினர். புரந்தரியின் வீட்டில் பக்தி பிரவாஹம் பொங்கி வழியத் தொடங்கியது. ரகுநாதர் புரந்தரதாஸரானது அடுத்த இதழில். (தொடரும்)

ஆடூர் அமரர் **R. கனகசபை** பிள்ளையின் இளைய குமாரர்

கார்குலத்தின் ஆலமரம் அமரர் **R.K.S. பிள்ளை**யின்

# 8ம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர் **R.K.S. சிவக்குமார் பிள்ளை**

கீ.ஆடூர் சிதம்பரம்

*என்றும் தங்கள் நினைவில் வாழும்*

**குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்**

**நண்பர்கள்**

சிதம்பரம்

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:
01.01.1934

மறைவு:
17.08.2025

திருமதி. **வீர. ராசாம்பாள் ஆச்சி**
கிளிமங்கலம்

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், கிளிமங்கலம் வேளா கோத்திரம், தெய்வதிரு. வீரப்பிள்ளை மனைவியும், எங்கள் அன்பு தாயாருமாகிய திருமதி. வீர. ராசாம்பாள் ஆச்சி 17.08.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மகன்: **வீ. பெரியசாமி பிள்ளை** – மருமகள்: **P. சேது ஆச்சி,** கிளிமங்கலம்

மகள்: **S. பிச்சம்மாள் ஆச்சி** – மருமகன்: **R. செல்வராசு பிள்ளை,** கிளிமங்கலம்

மகள்: **T. ஆண்டாள் ஆச்சி** – மருமகன்: **திருஞானசம்பந்தம் பிள்ளை,** கொத்தட்டை

மற்றும்

**பேரன்கள், பேத்திகள்; கொள்ளுபேரன்கள், பேத்திகள், உறவினர்கள்**

# நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்
# 10-ம் ஆண்டு நினைவஞ்சலி



## G. அம்புஜம் அம்மாள்

மயிலாடுதுறை மாவட்டம் ஓதாரி கிராமத்தை சேர்ந்த காலஞ்சென்ற திரு. V. கணேசன் பிள்ளை அவர்களின் மனைவி திருமதி. **G. அம்புஜம் அம்மாள்** அவர்களின் 10–ம் ஆண்டு நினைவஞ்சலி

என்றும் உங்கள் நினைவுகளோடு வாழும்

மகன்கள்

**G. ராஜேந்திரன்** (லேட்) – **R. அபிராமி**
**G. வரதராஜன்** (G.V.T. Construction) -
**V. திரிபுரசுந்தரி,** சிதம்பரம்
**G. செல்வம்** (G.S.M. Enterprises) -
**S. செல்வி,** Chennai - 53
**G. ராஜா** (A.G.A. Decoraters) -
**R. ஆனந்தி,** Chennai - 53

மகள்கள்

**B. ராணி – R. பாலு**
**M. தமிழரசி – S. மதிவாணன்**
**V. அமுதா – V. வடிவேல்**
**M. சாந்தி – S. முத்தையா**
**R. லஷ்மி – R. ரமேஷ்**

**பேரன் - பேத்தி - கொள்ளு பேரன் - பேத்தி**
மற்றும் **உறவினர்கள்**

# Centenary Birthday Remembrance

09.09.1925 — 09.09.2025



## டாக்டர் M. நடராஜன்

**எங்களை நன்முறையில் அன்புடன் வாழவைத்த**
**தங்களின் திருவடிகளை நன்றியுடன் தொழுகிறோம்.**

| மகள் – மருமகன் | மகன் – மருமகள் | மகள் – மருமகன் |
|---|---|---|
| சௌதாமினி கந்தையா | Dr. N. முருகன் | ஆனந்தி சபேசன் |
| Dr. R. கந்தையா | Dr. மஞ்சுளா முருகன் | S.M. சிற்சபேசன் |
| வித்யா - விக்னேஷ் | ஆயுஷ் | பாலமுருகன் - சுபாஷினி |
| விநாயக் - சௌந்தர்யா | | அவினாஷ் - பாவ்னா |
| அம்ரித் - ஆதித் - மயூரி | | ருஷின் - ஷிவின் - அராண் |

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
17–05–1964

மறைவு :
05–10–2020

## தெய்வத்திருமதி. K. விமலா கண்ணன்

சிதம்பரம் நகர முன்னாள் கவுன்சிலர், தி.மு.க.

*பாசத்தின் பிரமாண்டமே! அன்பின் ஆளுமையே!*
*பண்பே பயனே! அன்பே அறனே! ஓய்ந்து விட்ட ஒளி விளக்கே*
*எங்களின் சேவைகள் மறுத்து, தேவைகள் தீர்த்த தேவதையே!*
*எங்களுக்கு எல்லாம் எது பிடிக்கும் என அறிந்து உடனளிப்பாய்*
*உணவாகினும், உடையாகினும், எதுவாகினும்....*
*மரணத்தின் வலியில் நீங்கள் துடித்ததை விட*
*எங்களை இனி யார் காக்க என கலங்கியதே அதிகம்.*
*எல்லாம் முடிந்து ஆண்டுகள் உருண்டது இன்னும்*
*வாழுகிறீர்கள் எங்கள் இதயங்களில் என்றும் மறையாமல் .....*
*மீளாதுயருடன் என்றும் உங்கள் பிரிவால் வாடும்.*

**கணவர் :** R. **கண்ணன்,** Foreman (Rtd) TANGEDCO
20/8A, திருவள்ளுவர் தெரு, சிதம்பரம்.

**மகள்:** K. **கவிதா வெங்கடேஷ்** B.E.
**மருமகன் :** N. **வெங்கடேஷ்,** B.E.,
தாம்பரம், சென்னை.

**மகன் :** S. **சுதாகர்** B.E., MBA.,
**மருமகள் :** B. **சந்தியா சுதாகர்,** BBA., B.A. (Hindi)
**பேத்தி:** S. **ஸ்ரீநிகா**
கேளம்பாக்கம், சென்னை

மற்றும் **உறவினர்களும், நண்பர்களும்.**

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03.05.1964

மறைவு
24.09.2020

## தெய்வத்திரு. M. மனோகரன் M.Com.,

( ரைஸ்மில் உரிமையாளர் ),

**வ.உ.சி தெரு, கழுக்காணி முட்டம்.**

அன்பின் பிறப்பிடமே
ஆசை அற்றவரே-பிறர்
இன்னல் துடைத்தவரே
ஈகை பலச் செய்தவரே
உழைப்பில் உயர்ந்தவரே
ஊர் போற்ற வாழ்ந்தவரே
எளிமையின் பிறப்பிடமே
ஏழைக்கு உதவியவரே
ஐம்பத்தாரில் மறைந்தீரே
எனை
ஒற்றையாய் விட்டு சென்றீரே
ஓராயிரத்தில் ஒருவராய் வாழ்ந்தவரே
ஔடதமாய் என் இதயத்தில் வாழ்கின்றீர்
காலன் வரும் வரையில்
கண்ணீரில் வாழும்
உங்கள் அன்பு மனைவி

**S.புஷ்பலதா மனோகரன்**

"மனோதமிழ் மாளிகை"

தங்கவேல் வாண்டையார் நகர், கழுக்காணிமுட்டம்.

Cell : 6383253423

# 20–ம் ஆண்டு நினைவஞ்சலி

## K.N.A.







B. நடராஜன் பிள்ளை

N. ஞானாம்பாள்





கீரமங்கலம் ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்

## புலவர். கீ.ந. அருள்பிரகாசம், எம்.ஏ.பி.எட்.,

எங்களை விட்டு 13.09.2005 பிரிந்த அன்புத் தந்தையே உங்களின் நினைவாக இவ்வாண்டும் நெஞ்சுருக நினைத்து வழிபடுகின்றோம். என்றென்றும் உங்களின் ஆசீர்வாதம் எங்களுக்கு கிட்டிட வணங்குகிறோம். பிரிவால் வாடும்.... நினைவில் வாழும்....

இணைந்து வணங்கும்

**திருமதி கிருட்டிணவேணி அருள்பிரகாசம்**

"ஞானராசர் குடில்"

No. 8, திருவள்ளுவர் முதல் குறுக்குத் தெரு,

முகப்பில் ஸ்ரீ வல்லப கணபதி திருக்கோயில்,

பூதாமூர், விருத்தாசலம்

செல் : 97882 58389

**அருள் இராமலிங்கம்,** B.E., M.I.S.T.E.,

**திருமதி. உஷா இராமலிங்கம்,** M.Sc., B.Ed.,

8/40-B2, Kasthuribai Nagar 2nd Main Road,

Adyar, Chennai - 600 020.

Cell : 98418 13589, 80123 65908

**திருமதி. சுஷ்மிதா விஷாலினி,** B.Arch.,

**திரு. செ. முகுல்வசந்த்,** B.E., MBA.,

செம்பாக்கம், சென்னை

**"PENTAGONS"** (ENGINEER & ARCHITECT)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி







தோற்றம் :
**29–03–1966**

மறைவு :
**28–08–2024**

மயிலாடுதுறை மாவட்டம், மணிக்கிராமம் தெய்வத்திரு. இராம. விஸ்வநாதன் பிள்ளை நலமுடன் திருமதி. சாரதா அவர்களின் மகனும், திருமதி. S. ரேவதி அவர்களின் கணவரும், எங்களது தந்தையாருமாகிய சீனிவாசபுரம் காந்திஜித் தெருவைச் சேர்ந்த

## திரு. Er. Rtn V. சுந்தரமூர்த்தி

(CIVIL ENGINEER, President (2022 - 23)
Rotary Club of Mayiladuthurai Kings)

என்றும் தங்கள் நினைவில் வாழும்.

மகள் – மருமகன்

**G. சுவேதா - கோவிந்த்,**
சிங்கப்பூர்.

மகன் – மருமகள்

**S. சுரேந்தர் - ஆர்த்தி,**
சென்னை.

பேரன் – பேத்தி

**சு. ஆதிரை - சு. மித்ரன்**
மற்றும் குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் :
3–12–1947

மறைவு :
29–07–2025

## திரு. **மாணிக்கம் பிள்ளை**, SBI (Rtd)

**8/3,** மேட்டுத் தெரு, திருவிழந்தூர், மயிலாடுதுறை.

பாசமிகு குடும்ப தலைவராய், கடமையில் சிறந்த வங்கி ஊழியராய், பல நூற்றுக்கணக்கான கார்குல மக்களின் திருமண வாழ்க்கைக்கு வழிகாட்டியாய், உற்றார் உறவினர்களுக்கு சிறந்த ஆலோசகராய் வாழ்ந்த திரு. மாணிக்கம் பிள்ளை அவர்கள் **29–07–2025** அன்று சிலலோக பதவி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

என்றென்றும் நீங்கா நினைவுகளுடன்

மனைவி **விஜயா மாணிக்கம்**

| மகன் – மருமகள் | மகள் – மருமகன் | பேரன்கள் – பேத்திகள் |
|---|---|---|
| **சீனுவாசன் மாணிக்கம்** | **சுபா செந்தில்குமார்** | **K.S. தரணீதரன்** |
| **வித்யா சீனுவாசன்** | **K. செந்தில்குமார்** | **பிரமோத் சுந்தர் ஸ்ரீ** |
| | | **வைபவி சுந்தர் ஸ்ரீ** |

மற்றும்

**உறவினர்களும், நண்பர்களும்.**


MARUTHI®
LET THE SUN
PAY YOUR
EB BILL
29 YEARS OF EXCELLENCE
INSTALL SOLAR
ROOFTOP SYSTEM
GET ₹0
ELECTRICITY
BILL
KEY FUTURE
BEST RETURN ON INVESTMENT - 19% TO 26%
NON POLLUTING - REDUCES GLOBAL WARMING.
EXCESS POWER GENERATED CAN BE SOLD.
28 YEARS PANEL WARRANTY.
CALL US
98418 28077
www.maruthipower.com
ANANDHAM SELVAKUMAR - CEO

Posted at Egmore RMS, Pathrikachanel, Chennai - 08.
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027
Date of Publication : 15th of Every Month
15th / 16th September 2025

CHOZHA HOTELS

# HOTEL KANAKABHISHEGAM

First Hotel From The Temple

**We sincerely thank Director Cheran for choosing to stay at our hotel with his family and for dining at our Amirtham Restaurant. We truly appreciate the feedback he shared with our staffs, and we feel honored by their gracious presence.**









Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 72/88, Kamaraj Colony 8th Street, (Palayakaran Street) Kodambakkam, Chennai, Tamil Nadu - 600 024. **Editor : S. ANBALAGAN**